

# கண்ணியம், சமத்துவம் மற்றும் நிர்வாகம்

## இலங்கையின் LGBTIQ+ சமூகத்தினரின் உரிமைகளைப் புரிந்துகொள்வதற்கும்இ ஆதரவளிப்பதற்குமான ஒரு வழிகாட்டி


தொகுப்பு

H.K.M. துஷார மனோஜ்

N.B. ஆதில் சுராஜ் விமுக்தி



Équité நிறுவனத்தின் வெளியீடு

# கண்ணியம், சமத்துவம் மற்றும் நிர்வாகம்

## இலங்கையின் LGBTIQ+ சமூகத்தினரின் உரிமைகளைப் புரிந்துகொள்வதற்கும், ஆதரவளிப்பதற்குமான ஒரு வழிகாட்டி


**தொகுப்பு**
H.K.M. துஷார மனோஜ்
N.B. ஆதில் சுராஜ் விமுக்தி

**தமிழ் மொழிப்பெயர்ப்பு:**
R. சதுர்சன்

**சரிபார்த்தவர்:**
அனுஷன் சத்தியசீலன்



ISBN -

ISBN: 9 7-8-6244 -888-0
9 786244 888017

Équité நிறுவனத்தின் வெளியீடு
2026 பெப்ரவரி

# உள்ளடக்கம்.


அறிமுகம்........................................................................................3

01. LGBTIQ+ சமூகம் என்பவர்கள் யார்?..........................................6

02. LGBTQI+ சமூகம் குறித்த வரலாற்று மற்றும் கலாசார பின்னணி.........................................................................................34

03. LGBTIQ+ சமூகத்தின் வாழ்வியல் எதார்த்தம்...............................39

04. இலங்கையில் வாழும் LGBTQ+ சமூகம் எதிர்கொள்ளும் பொதுவான சவால்கள்..............................................................41

05. LGBTIQ+ சமூகம் தொடர்பான பொதுவான கட்டுக்கதைகள் குறித்து உயர் நீதிமன்றத்தின் கருத்து எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?................................................................46

06. பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட சேவை வழங்கும் தரப்பினரிடமிருந்து LGBTQ+ சமூகம் எதிர்பார்ப்பது என்ன?........51

07. LGBTIQ+ சமூகத்திற்கு ஆதரவளிக்கும் மற்றும் பன்முகத்தன்மையை மதிக்கும் நிறுவனங்கள் எவை?.................56

08. LGBTIQ+ சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தற்போதுள்ள தீர்ப்புக்கள், வர்த்தமானிகள், பிரகடனங்கள், பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டல்கள் எவை?....59

09. அரச சேவையில் பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகள்.................................................................73

10. சர்வதேச உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும்...........................75

# அறிமுகம்

LGBTQ+ சமூகம் உள்ளிட்ட ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்குச் சேவை வழங்கும் ஒரு பங்குதாரர் என்ற வகையில், நீங்கள் அந்தச் சமூகத்துடன் பணியாற்றும் போது சரியான மனப்பாங்குடன், ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதுடன், வெளிப்படைத்தன்மையுடன் சேவை வழங்குவது அவசியமாகும்.

இந்தக் கையேடானது உங்களுக்கு, LGBTQ+ சமூகம் என்பவர்கள் யார், அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் என்ன, அவர்கள் சமூகத்தில் வாழும்போது எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் என்ன என்பது தொடர்பாகவும், ஒரு உத்தியோகத்தர் என்ற ரீதியில் அவர்களுக்கு இணக்கமான ஒரு பங்குதாரராக நீங்கள் எவ்வாறு செயற்பட முடியும் என்பது குறித்த வழிகாட்டல்களை வழங்குகிறது. இந்த வழிகாட்டியைத் தயாரிப்பதன் ஊடாக, LGBTQ+ சமூகம் போன்ற ஒதுக்கப்பட்ட மற்றும் புறக்கணிப்புகளுக்கும் பாரபட்சங்களுக்கும் உள்ளாகின்ற சமூகத்தின் கௌரவம், பன்முகத்தன்மை மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தும் ஒரு உத்தியோகத்தராக உங்களைப் பயிற்றுவிப்பதையே நாம் எதிர்பார்க்கிறோம்.

"LGBTQ+ சமூகத்தின் பன்முகத்தன்மை, சுயகௌரவம் மற்றும் சிறந்த அரச சேவை" எனும் தலைப்பில் ஈக்விட்டி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் பயிற்சித் திட்டங்களில் கலந்துகொள்ளும் உங்களுக்கு, இந்தக் கையேட்டை மிகுந்த மரியாதையுடனும் ஒத்துழைப்புடனும் சமர்ப்பிக்கின்றோம்.

LGBTQ+ நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தேசிய அமைப்பான

**Équité** நிறுவனம், சமூக நீதி மற்றும் ஒழுக்க விழுமியங்களை ஊக்குவிப்பதோடு, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய அரச சேவைக்கான உங்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டுகிறது. இந்தப் பயிற்சித் திட்டத்தின் மூலம் உங்களின் அறிவும் மனப்பாங்கும் வளர்ச்சியடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

எமது நாடு முழுவதும் வாழும் பல LGBTQ+ நபர்கள், இன்னமும் தமக்கு ஏற்பட்ட அவப்பெயர், தவறான புரிதல்கள் அல்லது பாகுபாடுகளுக்கு உள்ளான கடந்தகால அனுபவங்கள் காரணமாக அச்சத்துடனும் மௌனமாகவும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக LGBTQ+ சமூகத்தினர் சமூகப் புறக்கணிப்புகளை எதிர்கொள்வது முதல் மிகக் கொடூரமான வன்முறைகளை அனுபவிப்பது வரை தனித்துவமான மற்றும் பல நேரங்களில் கண்ணுக்குத் தெரியாத சவால்களை எதிர்கொள்கின்றனர். அரச நிறுவனங்கள், குறிப்பாக காவல்துறை (Police) அவர்கள் மீது அனுதாபத்துடனும், நேர்மையுடனும் மற்றும் நீதியுடனும் செயற்படும்போது மட்டுமே இவற்றுக்குத் தீர்வுகாண முடியும்.

அனைத்து இலங்கையர்களினதும் கௌரவம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உங்களின் அர்ப்பணிப்பிற்கு ஆதரவளிக்கும் வகையிலேயே இந்தக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், நபர்களின் பாலியல் நோக்குநிலை, பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு அல்லது பால்நிலை பண்புகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது அவர்களுக்கான முறையான வழிகாட்டல், உள்ளூர் சூழல் மற்றும் நீதியையும் சமத்துவத்தையும் பின்தொடர்வதில் எவரும் விடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்த உதவும் பயனுள்ள கருவிகளை இது வழங்குகிறது.

Équité ஆகிய நாம் நம்புவது யாதெனில், ஒரு பாதுகாப்பான சமூகம் என்பது வேறுபாடுகளுக்காகத் தண்டிக்கின்ற சமூகமல்ல, மாறாக வேறுபட்டத்தன்மை கொண்ட நபர்களைப் பாதுகாக்கின்ற ஒரு சமூகமாகும். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் மற்றும்

பொதுமக்களுக்காகச் சேவை வழங்கும் தொழில் வல்லுநர்கள் என்ற வகையில், இந்தப் பயணத்தில் உங்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

நாம் ஒன்றிணைந்து, ஒவ்வொரு பிரஜையும், அவர்கள் யாராக இருந்தாலும், நம்பிக்கையுடன் உங்கள் சேவை நிலையத்திற்குள் நுழையக்கூடிய, கௌரவத்துடன் நடத்தப்படக்கூடிய மற்றும் நீதியினால் பாதுகாப்புப் பெறக்கூடிய ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம்.

உங்கள் சேவைக்கும், உங்கள் தலைமைத்துவத்திற்கும் மற்றும் புதியவற்றைக் கற்றுக்கொள்வதற்கான உங்களின் வெளிப்படைத்தன்மைக்கும் நன்றிகள்.

# 01. LGBTIQ+ சமூகம் எனப்படுபவர்கள் யார்?

LGBTQ+ சமூகம் என்பது இலங்கை உட்பட உலகம் முழுவதிலும் உள்ள ஒரு ஒதுக்கப்பட்ட சமூகமாகும். அவர்கள் குறித்த மக்களின் அறியாமை, வெறுப்புணர்வு, பிற்போக்கு எண்ணங்கள் மற்றும் தவறான தகவல்களின் அடிப்படையில் இவர்கள் பல்வேறு வழிகளிலும் பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர், புறக்கணிக்கப்படுகின்றனர் மற்றும் அவமதிக்கப்படுகின்றனர். அதுமட்டுமன்றி, அவர்களுக்கு எதிராக உடல் ரீதியான, வாய்மொழி ரீதியான மற்றும் மன ரீதியான வன்முறைகளும் இடம்பெறுகின்றன.

இருப்பினும், அவர்களுக்குத் துன்புறுத்தல் செய்பவர்களில் பலரும், ஏனைய மனிதர்களைப் போலவே அவர்களுக்கும் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் உரிமை உண்டு என்பதும், ஏனைய மனிதர்களுக்கு நிகராக வாழ்வதற்க்கான உரிமை கொண்ட நபர்கள் என்றும், மனித உரிமைகளை அனுபவிக்க அவர்களுக்கும் சம உரிமை உண்டு என்ற விடயத்தை மறந்துவிடுகிறார்கள். அதோடு, ''அவர்களின் பாலின ஈர்ப்பு அல்லது பாலின அடையாளம் எதுவாக இருந்தாலும் அவர்களும் சக மனிதர்களே'' என்பதை மறந்துவிடுகின்றனர்.

LGBTQ+ சமூகத்தினரை பாரபட்சமாக நடத்தும் அல்லது துன்புறுத்தும் பல்வேறு குழுக்களுக்கிடையில் இலங்கை காவல்துறை ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. Équité நிறுவனத்தினால் 2023 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி LGBTQ+ சமூகத்தைச் சேர்ந்த பலருக்கும் காவல்துறை தொடர்பாக நல்லதொரு மனப்பாங்கு இருக்கவில்லை. சட்டவிரோதமான கைதுகள், தாக்குதல்கள், மனிதாபிமானமற்ற சித்திரவதைகளுக்கு உள்ளாக்குதல், அவமதித்தல், தன்பால் ஈர்ப்புடைய அல்லது திருநர் சமூகத்தை சேர்ந்த நபர்களை அவர்களது பெற்றோர் அல்லது சமூகத்திற்கு வலுக்கட்டாயமாக

வெளிப்படுத்துதல், ஏனையோர் முன்னிலையில் தகாத வார்த்தைகளால் ஏசுதல் மற்றும் அருவருப்பாகக் கருதுதல் எனப் பல்வேறு வடிவங்களில் அவர்களுக்கு எதிராகக் காவல்துறையினரால் முன்னெடுக்கப்படும் வன்முறைகள் குறித்த தகவல்கள் தொடர்ச்சியாகப் பதிவாகின்றன. இத்தகைய வன்முறைகள் மற்றும் பாரபட்சங்கள் தொடர்பாக LGBTQ+ சமூகத்தினர் உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் முறைப்பாடுகளைச் செய்கின்றனர். அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் தலையீடுகள் காரணமாக, இலங்கை காவல்துறை தற்போது LGBTQ+ சமூகத்தின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிப்பு செய்து வருவதுடன், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது தொடர்பாகப் பயிற்சிகளையும் பெற்று வருகின்றது.

இப்போது நாம் LGBTQ+ சமூகம் என்பவர்கள் யார் என்பதை எளிமையாகப் புரிந்துகொள்வோம்:

L – Lesbian (லெஸ்பியன்): தன்பால் ஈர்ப்புடைய பெண்கள்

G – Gay (கே): தன்பால் ஈர்ப்புடைய ஆண்கள்

B – Bisexual (பைசெக்ஷுவல்): இருபால் ஈர்ப்புடையோர்

T – Transgender (ட்ரான்ஸ்ஜெண்டர்): திருநர்

I – Intersex (இன்டர்செக்ஸ்): ஊடு பாலினத்தவர்

Q – Questioning (கொஸ்டினிங்): தமது பால்நிலை நோக்குநிலை அல்லது பாலின அடையாளம் என்ன என்பதை இன்னும் கண்டறிந்து கொண்டிருக்கும் நபர்கள்.

மேலே குறிப்பிடப்பட்டவர்களுக்கு மேலதிகமாக இன்னும் பல பால்நிலை நோக்குநிலைகளும் பாலின அடையாளங்களும் காணப்படுகின்றன. அவர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகவே இந்த “+” அடையாளம் பயன்படுத்தப்படுகிறது.

## Lesbian - லெஸ்பியன்- தன்பால் ஈர்ப்புக்கொண்ட பெண்கள்

தன்பால் ஈர்ப்புக்கொண்ட/ஈர்ப்புடைய பெண்கள் என்பது, ஒரு பெண்ணிற்கு இன்னொரு பெண்ணின் மீது உடல் ரீதியாக, உள ரீதியாக மற்றும் ஆன்ம ரீதியாக ஈர்க்கப்படும் நிலையாகும். இவ்வாறு ஒரு பெண் இன்னொரு பெண்ணின் மீது உடல், மன மற்றும் ஆன்ம ரீதியாக ஈர்க்கப்படுவதையே “லெஸ்பியன்“ என சர்வதேச உளவியலாளர்கள் சங்கம் வரையறுக்கிறது.

உலகம் பன்முகத்தன்மை கொண்டது. அனைவரும் ஒரே மாதிரியாகப் பிறப்பதில்லை. பிறக்கும் அனைவரும் எதிர் பாலினத்தவர் மீது ஈர்க்கப்படுவதுமில்லை. பெண்ணாகப் பிறந்து இன்னொரு பெண்ணின் மீது ஈர்க்கப்படுபவர்களும் இருக்கிறார்கள். இது அவர் பிறக்கும்போதே அவருக்குக் கிடைத்த மரபணுக்கள், ஹார்மோன்கள் மற்றும் உளவியல் காரணிகளின் அடிப்படையில் அமைந்த ஒரு விடயமாகும். அதைவிடுத்து அவர் தனது விருப்பத்தினால் தன்பால் ஈர்ப்புடைய பெண்ணாக மாறவில்லை.

நீங்களும் இந்தச் சமூகமும் அவர்களை அவமதிக்கும்போது, எவரும் விரும்பி அந்த அவமதிப்புகளைச் சுமக்கவோ அல்லது அனுபவிக்கவோ தன்பால் ஈர்ப்புள்ளவராக மாறுவதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதேபோன்று, உளவியல் சிகிச்சைகள், ஏனைய மருத்துவ சிகிச்சைகள் அல்லது மந்திரித்தல் போன்ற சடங்குகள் மூலம் அவர்களுக்குள் ஏற்படும் இந்த உணர்வுகளை மாற்ற முடியாது.

## Gay - கே - தன்பால் ஈர்ப்புக்கொண்ட ஆண்கள்

தன்பால் ஈர்ப்புக்கொண்ட/ஈர்ப்புடைய ஆண்கள் என்பது, ஒரு ஆண் இன்னொரு ஆணின் மீது உடல், உள மற்றும் ஆன்ம ரீதியாக ஈர்க்கப்படுவதாகும். மேலே குறிப்பிட்டதைப் போலவேதான் தன்பால் ஈர்ப்புக்கொண்ட ஆண்களும். அவர்களின் மரபணுக்கள், ஹார்மோன்கள் மற்றும் உளவியல் காரணிகளின் அடிப்படையில் இன்னொரு ஆணின் மீது ஈர்க்கப்படுகிறார்கள்.

சர்வதேச உளவியலாளர்கள் சங்கம் விளக்கியுள்ளபடி, தன்பால் ஈர்ப்பு என்பது மிகவும் இயல்பான ஒரு விடயமாகும். தன்பால் ஈர்ப்பைக் கட்டுப்படுத்த முடியாது, ஏனெனில் அது அந்த நபர்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்டது.

இலங்கையில் இலட்சக்கணக்கான தன்பால் ஈர்ப்புக்கொண்ட ஆண்கள் வாழ்கின்றனர். இருப்பினும், சமூகத்தினால் அவர்களுக்கு இழைக்கப்படும் பாகுபாடுகள் மற்றும் புறக்கணிப்புகள் காரணமாக, அவர்களில் பெரும்பாலோர் தமது அடையாளத்தை மறைத்துக்கொண்டே வாழ்கின்றனர்.

## Bisexual - பைசெக்ஷுவல் - இருபால் ஈர்ப்புடையோர்

பைசெக்ஷுவல் (இருபால் ஈர்ப்புடையோர்) என்பது ஒரு நபர் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இரு தரப்பினர் மீதும் ஈர்க்கப்படுவதாகும். இருபால் ஈர்ப்புடைய நபர்கள் உடல் ரீதியாக, மன ரீதியாக மற்றும் ஆன்ம ரீதியாக இரு பாலார் மீதும் உணர்வுகளைக் கொண்டிருப்பார்கள். மேலும் அவர்கள் தமது வாழ்க்கையில் தமக்கு மிகவும் இணக்கமான மற்றும் விருப்பமான ஒருவருடன் வாழ்வதற்கோ அல்லது நேசிப்பதற்கோ தேர்வு செய்கிறார்கள். மேலே குறிப்பிட்டதைப் போலவே இதுவும் ஒரு நோயோ அல்லது அசாதாரண நிலையோ அல்ல.

மனிதர்கள் பன்முகத்தன்மை கொண்டவர்கள். எனவே, பைசெக்ஷுவல் நபர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவர் மீதும் ஈர்க்கப்படும் வகையிலேயே பிறக்கிறார்கள். இவ்வாறான உறவு நிலைகளின் தன்மை காரணமாக, சில

நேரங்களில் அவர்களுக்கு உங்களது உதவி, ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்பு தேவைப்படலாம். இவ்வாறான நபர்களுக்கு நீங்கள் ஆதரவளிக்க வேண்டுமாயின், அவர்களைப் பற்றி ஒரு திறந்த மனதுடனும் அவர்களின் பிரச்சினைகளை நடுநிலையான முறையிலும் புரிந்துகொள்ள கூடிய நபராக இருக்க வேண்டும்.

## Transgender - ட்ரான்ஸ்ஜெண்டர் - திருநர்

“பால்நிலை மாற்றம்” (Transition) என்பது ஒரு நிலையிலிருந்து இன்னொன்றுக்கு மாறுவது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இங்கே குறிப்பிடப்படுவது அவ்வளவு எளிமையான விடயமல்ல. இது ஒரு நபரின் அடையாளம் சார்ந்த நிலையாகும்.

உதாரணமாக, ஒரு நபர் ஆண் பிறப்புறுப்புடன் பிறந்தார் என்று வைத்துக்கொள்வோம். அவரது வெளிப்புற உடல் உறுப்புகளைப் பார்த்து அவர் ஒரு “ஆண்” எனப் பிறப்பிலேயே தீர்மானிக்கப்பட்டு, பிறப்புச் சான்றிதழிலும் அவ்வாறே குறிப்பிடப்படுகிறது. ஆனால், அவ்வாறு பிறந்த ஒருவருக்குத் தனது மனதளவில் தான் ஒரு “பெண்” என்ற உணர்வு ஏற்படலாம். அல்லது பெண் பிறப்புறுப்புடன் பிறந்து, பிறப்புச் சான்றிதழில் “பெண்” என அடையாளப்படுத்தப்பட்ட ஒருவருக்குத் தான் ஒரு “ஆண்” என்ற மன உணர்வு ஏற்படலாம்.

இவ்வாறு பிறப்பின் போது வழங்கப்பட்ட பாலின அடையாளத்திற்கு மாறான மன உணர்வைக் கொண்டிருப்பவர்கள் அல்லது பிறப்புப் பாலினத்திற்கு மாறாகச் சிந்திக்கும், உடை அணியும், பேசும் மற்றும் நடந்துகொள்ளும் நபர்களே திருநர் (Transgender) என அழைக்கப்படுகின்றனர்.

இவர்களில் இரண்டு பிரிவினர் உள்ளனர்:

1) **திருநம்பி (Transgender Men):** பிறப்பின் போது பெண் பிறப்புறுப்புடன் பிறந்து, அதாவது பிறப்புச் சான்றிதழில்

பெண்ணாகப் பதிவு செய்யப்பட்டு, பின்னர் தன்னைப் பற்றிய புரிதல் வரும் வயதை எட்டும்போது தன்னை ஒரு ஆணாக உணரும் நபர்கள்.

2) **திருநங்கை (Transgender Women):** பிறப்பின் போது ஆண் பிறப்புறுப்புடன் பிறந்து, பிறப்புச் சான்றிதழில் ஆணாகப் பதிவு செய்யப்பட்டு, ஆனால் தனது மனதளவில் தன்னை ஒரு பெண்ணாக உணரும் நபர்கள்.

இலட்சக்கணக்கான திருநர்கள் எமக்கிடையே வாழ்ந்து வருவதோடு, இவர்களுக்கு சமூகத்திடமிருந்து வரும் அழுத்தம், புறக்கணிப்பு மற்றும் பாகுபாடு காரணமாகப் பலர் தமது அடையாளத்தை மறைத்து வாழ்கின்றனர். இன்னும் சிலர் தமது உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்தி, தமக்கு விருப்பமான முறையில் வாழத் தொடங்குகின்றனர். அவ்வாறு தமது உண்மையான அடையாளத்துடன் வாழ்வது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஏனெனில் சமூகம் அவர்களுக்குப் பாரிய அவப்பெயரையும் அவமதிப்பையும் ஏற்படுத்துகிறது. இவை அனைத்தையும் தாங்கிக்கொண்டுதான் அவர்கள் சமூகத்தில் ‘‘தாம் தாமாகவே வாழ்கிறார்கள்’’. எனினும், நீங்கள் இவர்களைப் பற்றிய சரியான புரிதலைக் கொண்டிருந்தால், அவர்களுக்கு ஆதரவளிக்க உங்களால் முடியும்.

## **Intersex - இன்டர்செக்ஸ் - ஊடுபாலினத்தவர்/ ஊடுபால்**

யாவரும் பிறப்பிலேயே பன்முகத்தன்மை கொண்டவர்கள் என்பதை இப்போது நீங்கள் தெளிவாக அறிந்திருப்பீர்கள். ஊடுபால் (Intersex) என்பது, ஒரு நபர் பிறக்கும்போதே வழமையான ஆண் அல்லது பெண் பிறப்புறுப்பு அடையாளங்களிலிருந்து மாறுபட்ட பாலியல் உறுப்புகளுடன் பிறப்பதாகும். ஒரு நபரின் உயிரியல் ரீதியான பால் (Biological Sex) என்பது அவருக்கு அமைந்துள்ள பிறப்புறுப்புகளின் தன்மையைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.

பாரம்பரியமாக ஆண் அல்லது பெண் பிறப்புறுப்புகளாக அடையாளம் காணப்படும் ஆண்குறி, விந்தகம் அல்லது பெண்குறி ஆகியவை அமைந்திருக்கும் விதம் அசாதாரணமாக இருப்பதே ஊடுபால் நிலையாகும். பல சந்தர்ப்பங்களில் ஆண்குறி மற்றும் பெண்குறி ஆகிய இரண்டும் கலந்த நிலையில் பிறப்பதையும் அடையாளம் காண முடியும்.

- உலக சனத்தொகையில் சுமார் 1.7% பேர் இடைலிங்கத்தவர்கள் ஆவர்.
- இவர்கள் நோயாளிகள் அல்ல.
- பலரது இடைலிங்க நிலையை பிறப்பிலேயே கண்டறிய முடியும், சிலருக்குப் பருவமடைந்த பின்னரே பிறப்புறுப்புகள் வளர்ச்சியடையாத நிலையை வைத்து கண்டறிய முடியும்.
- இன்னும் சிலருக்கு வந்தைத்தன்மை அல்லது மரபணுப் பரிசோதனைகளின் போதே தாம் இடைலிங்கத்தவர் என்பது தெரியவருகிறது.

காவல்துறை அதிகாரிகள் அல்லது ஏனைய சேவை வழங்குநர்கள் என்ற ரீதியில், இந்த இடைலிங்கச் சமூகம் பற்றி அறிந்திருப்பது மிகவும் முக்கியமானது. சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்காமை, பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் மீறப்படுதல், அனுமதி இன்றி அல்லது வலுக்கட்டாயமாகச் செய்யப்படும் அறுவை சிகிச்சைகள், சமூகத் தடைகள், வெட்கம், அவமானம் மற்றும் அவமதிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளை இவர்கள் எதிர்கொள்கின்றனர்.

**<u>Questioning - கேள்விக்குள்ளாதல் - தமது பாலியல் நோக்குநிலை அல்லது பால்நிலை அடையாளத்தை இன்னும் கண்டறிந்து கொண்டிருக்கும் நிலையில் உள்ளவர்களை இது குறிக்கும்.</u>**

இலங்கை போன்ற நாடுகளில் முறையான மற்றும் விரிவான பாலியல் கல்வி இல்லாமை அல்லது பாலினம் மற்றும் அது

தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் முடக்கப்பட்டிருத்தல் போன்ற காரணங்களால், சில நபர்கள் தமது உண்மையான அடையாளம் என்ன என்பதைப் புரிந்து கொள்வதிலும் கண்டறிவதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இன்னும் சிலர் தாம் குறித்த தேடல்களினாலும் சுய கேள்விகளினாலும் தமது வாழ்வின் பெருமதியான காலத்தை வீணாக்குவதையும் காணமுடிகிறது.

'Questioning' என்பது ஒரு நபர் தனது பாலியல் நோக்குநிலை (யாரை விரும்புகிறார்?), பால்நிலை அடையாளம் (அவரது உண்மையான ஆளுமை அடையாளம்) அல்லது பால்நிலை வெளிப்பாடு (அவர் தன்னை வெளிப்படுத்தும் விதம்) குறித்து இன்னும் ஒரு நிலையான முடிவுக்கு வராத நிலையைக் குறிக்கிறது. இது சிலருக்குத் தமது வாழ்நாள் முழுவதும் தன்னை தேடிக்கொண்டிருக்க வேண்டிய ஒரு நிலையாகவும் அமையலாம்.

- சிலருக்குத் தாம் பாலியல் ரீதியாக யாரால் ஈர்க்கப்படுகிறோம் என்பதில் சவால்கள் இருக்கலாம்.
- சிலருக்குத் தமது பால்நிலை அடையாளம் குறித்துக் கேள்விகள் இருக்கலாம்.
- இன்னும் சிலருக்குத் தாம் ஆடை அணியும் விதம் அல்லது சமூகத்தில் தம்மைக் வெளிக்காட்டும் விதம் குறித்துக் கேள்விகள் இருக்கலாம்.

## Sexual Orientation- பாலியல் நோக்குநிலை

LGBTIQ+ சமூகம் என்றால் யார் என்பது பற்றி இப்போது நீங்கள் அறிந்திருப்பீர்கள். மேலே குறிப்பிட்ட அடையாளங்களுக்கு மேலதிகமாக இன்னும் ஏராளமான அடையாளங்கள் உள்ளன. அவை பற்றி இந்த கையேட்டின் ஆரம்பத்தில் வழங்கப்பட்டுள்ள கலைச்சொற்களின் மூலம் விரிவாகத் தெரிந்திருப்பீர்கள்.

பாலியல் நோக்குநிலை என்பது ஒரு நபர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆன்ம ரீதியாகவும் யாரால் ஈர்க்கப்படுகிறார் என்பதைக் குறிக்கும். அதாவது, ஒரு நபர் யாருடன் பாலியல் ரீதியாக இணைய விரும்புகிறார், யாரை நேசிக்க விரும்புகிறார் மற்றும் யாருடன் தனது வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார் என்பதாகும்.

பாலியல் நோக்குநிலை என்பது ஒரு தனிப்பட்ட தெரிவு அல்ல. அது அந்த நபர்களுக்குத் தங்களைப் பற்றியும், தமது ஆன்மா பற்றியும் தோன்றும் ஆழமான மற்றும் உணர்வுப்பூர்வமான உணர்வுகளின் கோவையாகும். மற்றுமொருவரின் பாலியல் நோக்குநிலையை நாம் கண்டறிந்து கொடுக்க முடியாது. அதேபோல், ஒருவரை ”இன்னாரை விரும்பு அல்லது இவரை வெறு” என்று கட்டாயப்படுத்தும் உரிமையும் எமக்கில்லை.

பாலியல் நோக்குநிலைகள் பிரதானமாக 05 வகைப்படும்.

I. எதிர்பாலீர்ப்பு - Heterosexual

II. தன்பாலீர்ப்பு- Homosexual

III. இருபாலீர்ப்பு- Bisexual

IV. அல்பாலீர்ப்பு- Asexual

V. பல்பாலீர்ப்பு- Pansexual

## I. எதிர்பாலீர்ப்பு - Heterosexual

ஒருவருக்கு எதிர் பாலினத்தைச் சேர்ந்த நபர்கள் மீது உடல், உள, ஆன்ம ரீதியாக ஈர்ப்பு ஏற்படுமாயின், அதனை “எதிர்பாலீர்ப்பு“ என்பார்கள். அதாவது, ஒரு பெண்ணுக்கு ஆண் மீதோ அல்லது ஒரு ஆணுக்கு ஒரு பெண் மீதோ ஈர்ப்பு ஏற்படுதல். இதில் ஒருவரை ஒருவர் நேசித்தல் மற்றும் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள

விரும்புதல் போன்றவை அடங்கும். இவர்களைச் சுருக்கமாக ஸ்ட்ரெயிட் என்றும் அழைப்பர்.

## II. தன்பாலீர்ப்பு- Homosexual

தமது பாலினத்தை அல்லது ஒரே பாலினத்தைச் சேர்ந்த நபர்கள் மீது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆன்ம ரீதியாகவும் ஈர்க்கப்படுவதையே தன்பாலீர்ப்பு என்கிறோம். இதில் தன்பாலீர்ப்புக் கொண்ட ஆண்கள் (Gay) தன்பாலீர்ப்புக் கொண்ட பெண்கள் (Lesbian) என இரு பிரிவினர் உள்ளனர். தற்போது “ஓரினசேர்க்கை“ என்ற சொல் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனெனில், அந்தச் சொல் ஒரு பிழையான அர்த்தத்தை தருவதோடு, இச் சொல்சம்பந்தமாக சமூகத்தில் நிலவும் சில எதிர்மறையான கருத்துக்கள் மற்றும் அவதூறுகள் காரணமாக அந்த நபர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதால், அதற்குப் பதிலாக அதிக மரியாதைக்குரிய சொற்களே பயன்படுத்தப்படுகின்றன.

## III. இருபால் ஈர்ப்பு - Bisexual

ஒரு குறிப்பிட்ட நபர் தனது அதே பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மீதும், எதிர் பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் உடல், உள, மற்றும் ஆன்ம ரீதியாக ஈர்க்கப்படுவதையே ‘‘பைசெக்ஷுவல்’’ அல்லது இருபாலீர்ப்பு என்று அழைக்கிறோம். அந்த நபர் எந்த அளவிற்குத் தனது அதே பாலினத்தவர்களால் ஈர்க்கப்படுகிறார் அல்லது எந்த அளவிற்கு எதிர் பாலினத்தவர்களால் ஈர்க்கப்படுகிறார் என்பதைத் துல்லியமாகக் கூற முடியாது. அது ஒவ்வொரு நபருக்கும் ஏற்ப மாறுபடலாம்.

## IV. அல்பாலீர்ப்பு - Asexual

சில நபர்கள் எந்தவொரு பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ அல்லது ஆன்ம ரீதியாகவோ

ஈர்க்கப்படுவதில்லை. அவர்கள் யாருடனும் பாலியல் ரீதியாக இணைவதற்கோ அல்லது ஆன்ம ரீதியான உறவுகளைப் பேணுவதற்கோ விரும்புவதில்லை.

## V. பல்பாலீர்ப்பு - Pansexual

மற்ற நபர்களின் பாலியல் நோக்குநிலை அல்லது பால்நிலை அடையாளம் ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளாமல், ஆண்/பெண்/திருநர் என எவர் மீதும் உடல், உள அல்லது ஆன்மீக ரீதியான உறவுகளைப் பேணும் நபர்களைக் குறிக்கப் பயன்படும் சொல்லாகும்.

- பொதுமக்களுக்குச் சேவை வழங்கும் ஓர் அதிகாரியாக மேலே உள்ள விளக்கங்கள் மூலம் நீங்கள் கற்க வேண்டியவை எவை? பட்டியலிடுங்கள்.

## பாலினம் - Gender.

இன்று வாழும் அனைத்து நபர்களுக்கும் ஒரு பாலினம் உள்ளது. பாலினம் என்பது, ஒரு நபர் சமூகம், கலாச்சாரம் மற்றும் உளவியல் ரீதியாகச் சமூகத்தில் வெளிப்படுத்தும் பங்களிப்புகள், நடத்தைகள், அடையாளங்கள் மற்றும் வெளிப்பாடுகளின் தொகுப்பாகும். பிறப்பின் போது ஒருவருக்குக் கிடைக்கும் உயிரியல் பாலிற்கு ஏற்ப, சமூகம் அவரிடமிருந்து எதிர்பார்க்கும் சில நடத்தை முறைகள் உள்ளன. அந்த நடத்தைகளுக்கு ஏற்றப அந்நபர் சமூகத்திற்கு தன்னை வெளிப்படுத்தும் முறையாகும்.

உதாரணமாக,

உங்களுக்குப் பிறப்பின் அடிப்படையில் “பெண்“ என்ற பாலினம் வழங்கப்பட்டதாகக் கருதுங்கள். சமூகம் உங்களிடமிருந்து ஒரு மகள், இளம்பெண், மனைவி, தாய், பேத்தி, ஆசிரியை, செவிலியர்

அல்லது ஏனைய பெண்மை சார்ந்த பதவிகளின் போது நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்பது குறித்து ஏற்கனவே ஒரு விம்பத்தை உருவாக்கியுள்ளது. நீங்கள் ஆடை அணியும் விதம், நீங்கள் நடந்து கொள்ளும் விதம் மற்றும் சமூகத்தில் நீங்கள் தோன்றும் விதம் குறித்துச் சமூகம் ஒரு வடிவத்தை உருவாக்கியுள்ளது.

- பெண் பிள்ளை இப்படித்தான் அமர வேண்டும்.
- பெண் பிள்ளை சத்தமாகச் சிரிக்கக் கூடாது.
- ஆடையைச் சரிசெய்து கொண்டு அமர வேண்டும்.

- தலைமுடியை வளர்க்க வேண்டும். இவ்வாறாக உயிரியல் பாலினத்திற்குச் சமூகம் வழங்கும் மதிப்புகள், பங்களிப்புகள் மற்றும் பாத்திரங்களையே பாலினம் என்கிறோம்.

முன்பெல்லாம் இந்த 'Gender' என்பதற்கு “ஆண்-பெண் பாலினம்“ என்று கூறப்பட்டது, ஆனால் இப்போது பொதுவாக “பாலினம்“ என்று மட்டுமே அழைக்கப்படுகிறது. அதற்கான காரணம், ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பிரிவுகளுக்கு அப்பாற்பட்ட வெவ்வேறு அடையாளங்களைக் கொண்டவர்கள் இச் சமூகத்தில் உள்ளனர் என்பதை இப்போது நீங்களே அறிவீர்கள்.

## Gender Identity- பால்நிலை அடையாளம்.

ஒவ்வொரு நபருக்கும் ஒரு பால்நிலை அடையாளம் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களது பால்நிலை அடையாளம் என்ன? பால்நிலை அடையாளம் என்பது ஒருவர் சமூகத்திற்கு தன்னை எவ்வாறு அடையாளப் படுத்திக்கொள்கிறார் என்பதை அடிப்பையாக கொண்டதாகும். பிறப்பின் போது உங்களுக்கு வழங்கப்பட்ட பாலினத்துடன் உங்கள் பால்நிலை அடையாளம் எப்போதும் ஒத்துப்போகாமல் இருக்கலாம். அது இயல்பானது, நோயல்ல.

உதாரணமாக, ஆண் உயிரியல் பாலினம் கொண்ட ஒருவர் தன்னை ஒரு பெண்ணாக உணர முடியும். அதேபோல், தான் உணரும் விதத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழவும் தேர்வு

செய்யலாம். பிறப்பு பாலினத்திற்கு ஏற்ப மனநிலை அமைந்தவர்களுக்கும், மாறுபட்ட அடையாளங்களைக் கொண்டவர்களுக்கும் சமூகத்தில் வாழ உரிமை உண்டு. அவர்களும் ஒரு மனிதனாகப், பிறப்பால் பெற வேண்டிய அடிப்படை மனித உரிமைகளை அனுபவிக்க உரிமை உண்டு என்பதையும், அதை அவர்களிடமிருந்து பறிக்க உங்களுக்கு உரிமை இல்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இப்போது பால்நிலை அடையாளங்கள் எவை என்று பார்ப்போம்.

i. Cis gender- நிலைத்த சமூகப்பாலினம்
ii. Transgender- திருநர்
iii. Gender nonconforming- உறுதிப்படுத்தப்படாத பால்நிலை
iv. Gender non binary- இருமைக்கு அப்பாற்பட்ட பால்நிலை
v. A gender- பால்நிலை அடையாளமற்றோர்

### i. <u>Cis gender- நிலைத்த சமூகப்பாலினம்</u>

பிறப்பின் போது ஒருவருக்கு வழங்கப்பட்ட ஆண் அல்லது பெண் என்ற உயிரியல் பாலினத்திற்கு ஏற்பவே சமூகம் எதிர்பார்க்கும் வகையில் வாழ்வது, அதாவது தன்னை அவ்வாறே உணர்ந்து, புரிந்து கொண்டு, சமூக கட்டமைப்பின்படி நடத்தைகள் மற்றும் ஆடை முறைகளைப் பேணுவதாகும். சமூகத்தில் பெரும்பாலானோர் இவர்களாவதோடு, இதுவே சமூகத்தில் நிலைநிறுத்தப்பட்ட மாதிரி சமூகப்பாலினமாகவும் (Gender Stereotype) கருதப்படுகிறது. சமூகத்தில் இவர்களை “சாதாரணமானவர்கள்“ என அடையாளம் காண்பதால், இவர்களுக்கு உரிமைகள் சார்ந்து சிக்கல்கள் இருப்பதில்லை. இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளின் சமூகக் கட்டமைப்பு இந்த நிலைத்த சமூகப்பாலினத்தை மேம்படுத்தவும் பேணுவதற்குமே உருவாக்கப்பட்டுள்ளது.

### ii. <u>Transgender- திருநர்</u>

இதற்கு முன்னர் திருநர் (Transgender) என்றால் யாரென்று நீங்கள் கற்றது நினைவிருக்கிறதல்லவா? மீண்டும் நினைவூட்டுவதானால், பிறப்பின் போது வழங்கப்பட்ட உயிரியல் பாலினத்திற்கு எதிரான ஒரு நபராகத் தன்னை உணருதல், புரிந்து கொள்ளுதல் மற்றும் அவ்வாறே தன்னை வெளிப்படுத்திக்கொள்பவர்கள் திருநராவர். இது மிகவும் கடினமான மற்றும் சமூகத்தால் ஒதுக்கப்படக்கூடிய ஒரு நிலைமையாகும். மனநல மருத்துவர்களின் கூற்றுப்படி, மனித மூளையின் இரசாயண மாற்றங்கள் காரணமாக, ஒரு நபர் தான் பிறப்பால் பெற்ற உயிரியல் பாலினத்திற்கு எதிரான ஒருவராகத் தன்னை உணரக்கூடும். இது ஒரு நோய் நிலைமை அல்ல.

**<u>பால்நிலை மாற்றம் - Transitioning.</u>**

பால்நிலை மாற்றம் என்பது, தான் ஒரு மாறுபட்ட நபர் அல்லது பிறப்புப் பாலினத்திற்கு எதிரான பால்நிலை அடையாளத்தைக் கொண்டவர் என்பதைப் புரிந்துகொண்ட பிறகு, தான் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் நபராக முழுமையாக மாறும் செயல்முறையாகும்.

நீங்கள் ஒரு நிலைத்த சமூகப்பாலின (Cisgender) நபர் என்று வைத்துக்கொள்வோம். அப்போது உங்களுக்கு உங்கள் அடையாளம் குறித்து எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் பிறக்கிறீர்கள், வளர்கிறீர்கள், பாடசாலைக்குச் செல்கிறீர்கள், உங்கள் பாலினத்திற்கு ஏற்ப விளையாடுகிறீர்கள், ஆடை அணிகிறீர்கள். பாடசாலையிலோ அல்லது சமூகத்திலோ உங்கள் ”இருக்க வேண்டிய முறை” குறித்து எந்தப் பிரச்சினையும் வராது. நீங்கள் ஒரு பெண்ணாகவோ அல்லது ஆணாகவோ வாழ்வதில் உங்களுக்குச் சிக்கல் இல்லை.

ஆனால், சிறுவயதிலிருந்தே உங்களுக்குப் பிறப்புப் பாலினத்திற்கு மாறாக, எதிர் பாலினத்தைச் சேர்ந்தவராக உணர்வு ஏற்பட்டால்,

அங்கேயே நீங்கள் ஒரு பெரிய சவாலை எதிர்கொள்கிறீர்கள். ஏனெனில்:

இதில் இருந்தே சமூக பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க ஆரம்பிக்கின்றீகள். நீல நிற ஆடைகள், விளையாட்டுத் துப்பாக்கிகள், டோசர்கள், பந்துகள் போன்ற பொருட்கள் பரிசாகக் கிடைக்கும், காலணிகள், காற்சட்டைகள், சட்டைகள் போன்றவையும் கிடைக்கும். நீங்கள் ஒரு அழகான மகனாக இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்ப்பார்க்கும்.இதுவே நீங்கள் ஒரு மகளாக இருந்தால், உங்களுக்கு இளஞ்சிவப்பு நிற ஆடைகள், பொம்மைகள், அழகான பேண்ட்கள், வளையல்கள், சமையல் விளையாட்டுப் பொருட்கள், சிண்ட்ரெல்லா பைகள், கம்மல்கள் போன்றவையே கிடைக்கும். சமூகம் உங்கைளை ஒரு அழகான பெண்ணாக காணவே எதிர்ப்பார்க்கிறது.

ஆனால், இதுவே ஒரு மகனாகப் பிறந்து சிறுவயதிலேயே ஒரு மகளாக உணர்ந்தால், அங்கே நீங்கள் ஆதரவற்றவராகிறீர்கள். ஏனெனில் சமூகம் உங்களைப் போன்றவர்கள் வாழ்வதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கவில்லை. இவ்வாறாக நீங்கள் ஒரு மாறுபட்ட நபர் என்பதையும், உங்கள் பிறப்பு அடையாளத்திற்கு எதிரான ஒருவராக மனதால் உணர்வதை புரிந்துகொண்டு, அந்த அடையாளத்தை ஏற்றுக்கொண்டு, அதன்படி வாழத் தொடங்குவது பால்நிலை மாற்றம்.

- **ஆன்ம /சுய பால்நிலை மாற்றம் - self-transition** என்பது,

இந்த சுய பால்நிலை மாற்றச் செயல்முறை மிகவும் கடினமானது. ஏனெனில் தான் ஒரு மாறுபட்ட நபர், தனக்கு என்ன நடக்கிறது, ஏன் தனக்குப் பிறப்பு உறுப்புகளுக்கு ஏற்ற நபராக உணர முடியவில்லை என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் சிக்கலான மற்றும் கடினமான செயலாகும். நமது நாட்டில் இவ்வாறான விடயங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதுமில்லை. பெற்றோர்கள், ஆசிரியர்கள் இது குறித்து விழிப்புணர்வுடன் இல்லை. எனவேதான், இவ்வாறான நிலைக்கு உள்ளாகும் பல

திருநர்கள் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள். தங்களைத் தாங்களே கேள்விக்குள்ளாக்கி, தமக்கு ஏதோ நோய் அல்லது மன ரீதியாகத் தான் பலவீனமானவர் என்று நினைக்கிறார்கள். இவ்வாறான காலகட்டத்தில் தமக்குள்ளேயே போராடிக்கொண்டிருக்கும்போது, குடும்பம், சமூகம் மற்றும் பாடசாலையிலிருந்து பெரும் அழுத்தம் வருகிறது.

‘‘நீ ஒரு ஆம்பளை, ஏன் பொம்பளை மாதிரி நடந்துக்கிறாய்?’’

‘‘நமது குடும்பத்திற்கே அவமானம் நீ’’

‘‘அலி’’

‘‘சமூகப் பிணி’’

‘‘நீ எங்கள் பரம்பரையே இல்லை’’

‘‘இவனுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும்’’ என்பது போன்ற சொற்களால், ஆணாகப் பிறந்து பெண்ணாக உணரும் பிள்ளைகளுக்குச் சமூகம் பெரும் அழுத்தத்தைக் கொடுக்கிறது.

‘‘பெண் பிள்ளை என்றால் அடக்கமாக இருக்க வேண்டும், வீட்டு வேலை செய்யத் தெரிய வேண்டும்’’

‘‘இவள் ஆண்பாதி பெண்பாதி ஆகப் பார்க்கிறாள்’’

‘‘பெண் பிள்ளைகளுக்கு, குட்டையாக உடுத்தாதே, பாவாடை உடுத்து, காற்சட்டை உடுத்தாதே’’

‘‘நன்றாகச் சமைக்கப் பழகிக்கொள், ஒரு தாயாக வேண்டியவற்றை கற்றுக்கொள்’’ என்பது போன்ற சொற்களால், பெண்ணாகப் பிறந்து மனதால் ஆணாகத் தன்னை உணருபவர்களுக்குச் சமூகம் அழுத்தம் கொடுக்கிறது.

இந்தச் சமூகப்பாலின அழுத்தங்கள் காரணமாகப் பல திருநர் பிள்ளைகள் பெரும் மன அழுத்தத்துடன் வாழ்கின்றனர். தான் யார் என்பதைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு அறிவோ, தகவலோ அல்லது சேவைகளோ கிடைப்பதில்லை. தன்னை எப்போதும் ஒரு குற்றவாளியாகவோ அல்லது பாவியாகவோ சமூகம் பார்ப்பதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. இதனால் இலங்கையில் திருநர் சமூக பிள்ளைகளுக்கு தங்களது சுய பால்நிலை மாற்றத்தை நோக்கி நகர்வது மிகக் கடினமான காரியமாகிறது. இந்த அனைத்துத் தடைகளையும் தாண்டி ‘‘தன்னைத் தானாகவே’’ புரிந்து கொண்டு மாறுவதையே சுய பால்நிலை மாற்றம் என்கிறோம். இது ஒரு மன ரீதியான கூண்டிலிருந்து வெளியே வருவது போன்றதாகும்.

* சுய பாலின மாற்றச் செயல்முறையை எளிதாகவும், மன அழுத்தமின்றியும் முன்னெடுப்பதற்கு நீங்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் யாவை?

- **<u>சட்ட ரீதியான பால்நிலை மாற்றம் - Legal Transitioning.</u>**

ஒரு நபர் சுய பால்நிலை மாற்ற நிலையைத் தாண்டி, தான் ஒரு திருநர் எனத் தனக்கும் சமூகத்திற்கும் வெளிப்படுத்திய பிறகு (அவ்வாறு வெளிப்படுத்துவது கட்டாயமல்ல), அந்த அடையாளத்துடன் வாழ்வது எளிதல்ல. சமூகம் அவர்களின் அடையாளத்தைக் கேள்விக்குள்ளாக்குவதால், தனது அடையாளத்தை நிரூபிக்கும் வகையில் ஆவணங்களைத் தயார் செய்ய வேண்டும். அவ்வாறான சூழ்நிலைகளில் திருநர்கள் பல்வேறு தடைகளை எதிர்நோக்குகின்றனர்.
இலங்கையில் இந்த ஆவண மாற்றுச் செயல்முறை எவ்வாறானது என இப்போது பார்க்கலாம். ஒரு நபர் சுய பால்நிலை மாற்றக் கட்டத்தைத் தாண்டிய பிறகு, அவர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக அவர்கள் அரசாங்க மாவட்ட வைத்தியசாலையின் மனநல மருத்துவப் பிரிவுகளில் பதிவு செய்தல் கட்டாயமானது. அந்த வைத்தியசாலைகள் பின்வருமாறு:

- கொழும்பு தேசிய வைத்தியசாலை
- நவோத்யா வைத்தியசாலை
- பேராதனை போதனா வைத்தியசாலை
- தெற்கு கொழும்பு போதனா வைத்தியசாலை
- வடக்கு கொழும்பு போதனா வைத்தியசாலை
- கம்பஹா மாவட்ட வைத்தியசாலை
- கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை
- மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலை
- வவுனியா மாவட்ட வைத்தியசாலை
- கண்டி தேசிய வைத்தியசாலை
- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

குறித்த வைத்தியசாலையின் மனநல மருத்துவப் பிரிவில் பதிவு செய்த பிறகு, ஒரு விசேட மனநல மருத்துவர் அந்த நபரை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பால்நிலை மாற்றத்திற்காகத் தயார்படுத்துவார். இதன்போது விசேட மருத்துவர் திருப்தியடையும் வரை, மாதத்திற்கு ஒருமுறை அந்த நபர் மருத்துவமனைக்குச் சென்று விசேட மனநல மருத்துவ சோதனைகளில் பங்கேற்க வேண்டும்.

- மனநல ஆலோசனைகள் வழங்கல்.
- பால்நிலை மாற்றச் செயல்முறைக்காக மனதைத் தயார் செய்தல்.
- ஹார்மோன் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளப் பரிந்துரைத்தல்.
- உடல் மாற்றங்கள், குரல், உடல் தோற்றப் பண்புகளைப் பரிசோதித்தல்.
- சமூகமயமாவதற்குத் தயார் செய்தல் என,

இந்தச் செயல்முறை பல படிநிலைகளைக் கொண்டது.மேலும் இது பல மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய மிகவும் சிக்கலான ஒரு செயல்முறையாகும். இதன்போது குறித்த திருநங்கையோ/

திருநம்பியோ மிகவும் சவாலான மற்றும் மன அழுத்தம் நிறைந்த ஒரு காலப்பகுதியையே செலவிடுகிறார். ஹார்மோன் சிகிச்சையினால் ஏற்படும் உடல் மற்றும் மன ரீதியான மாற்றங்களைத் தாங்குதல், வைத்தியசாலை ஊழியர்களின் புறக்கணிப்புகள் மற்றும் பாகுபாடுகளை எதிர்கொள்ளுதல், குடும்பம் மற்றும் சமூகத்திடமிருந்து வரும் குற்றச்சாட்டுகள் மற்றும் துன்புறுத்தல்களைத் தாங்குதல், வேலையிலிருந்து நீக்கப்படுதல், கல்வி வாய்ப்புகள் பறிபோதல் போன்ற பல்வேறு சவால்களை திருநர் சமூகத்திறனர் இக்காலகட்டத்திலேயே எதிர்கொள்கின்றனர்.

இந்த அனைத்துச் சவால்களையும் தாண்டி இறுதியாக, குறித்த திருநருக்கு விசேட மனநல மருத்துவரின் கையொப்பத்துடனும், அந்த வைத்தியசாலைப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடனும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும். இது பால்நிலை அங்கீகாரச் சான்றிதழ் (Gender Recognition Certificate - GRC) என அழைக்கப்படுகிறது. இந்த GRC சான்றிதழைப் பெறுவது ஒரு திருநருக்கு வாழ்க்கையில் முக்கியமான ஒரு மைல்கல்லாகும்.

அதன் பிறகு, இந்த GRC சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மூலம் திருநர்களுக்கு தனது பிறப்புச் சான்றிதழைத் திருத்தம் செய்துகொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. பழைய பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர்/பாலினத்திற்குப் பதிலாகப் புதிய பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவும், அதில் தனது புதிய அடையாளத்தை உறுதிப்படுத்தவும் முடிகிறது. பின்னர், திருத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் மற்றும் GRC சான்றிதழைச் சமர்ப்பித்து புதிய தேசிய அடையாள அட்டையிற்கு (NIC) விண்ணப்பிக்க முடியும். திருநர்களுக்கு இது ஒரு சிக்கலான மற்றும் பல சிரமங்களை எதிர்கொள்ளும் ஒரு கட்டமாக அமைகிறது.

பல உயர் அதிகாரிகள் இந்த பால்நிலை மாற்றச் செயல்முறை மற்றும் GRC பற்றி அறியாத காரணத்தினால், அடையாள

அட்டையை மாற்றும் போது திருநர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகப் புகார்கள் கிடைக்கின்றன.

அத்துடன், திருநர்களுக்குத் தமது பரீட்சைச் சான்றிதழ்கள், பட்டச் சான்றிதழ்கள் போன்றவற்றை மாற்றிக்கொள்ளவும் இந்தச் சட்ட ரீதியான பால்நிலை மாற்றத்தின் கீழ் வாய்ப்புக் கிடைக்கிறது. சட்ட ரீதியான பால்நிலை மாற்றம் என்பது கட்டாயமான ஒன்றல்ல. எனினும், திருநர்கள் தங்களது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க இந்தச் சட்ட ரீதியான மாற்றம் என்பது அவசியமானது. ஆனால், சட்ட ரீதியான மாற்றம் சவாலான மற்றும் மன அழுத்தம் நிறைந்த செயல்முறை என்பதால், GRC சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாத ஏராளமான திருநர்கள் சமூகத்தில் உள்ளனர் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது அல்லது வேறு விதமாக நீங்கள் திருநரைச் சந்தித்தால், அவர்கள் அனைவரிடமும் GRC சான்றிதழ் இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- **<u>மருத்துவ ரீதியான பால்நிலை மாற்றம் -Medical Transitioning</u>**

மருத்துவ ரீதியான பால்நிலை மாற்றம் என்பது ஹார்மோன் சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் மூலம் ஒரு திருநர் (திருநங்கை/திருநம்பி) தன்னைத் தனது தற்போதைய அடையாளத்திற்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளும் செயல்முறையாகும்.

பிறக்கும் போது ஆணாக பிறந்த ஒருவர், ஈஸ்ட்ரோஜன் (Estrogen) மற்றும் ஆண் ஹார்மோன் எதிர்ப்பு (Anti-Androgens) மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் தனது வெளிப்புறத் தோற்றத்தைப் பெண்ணாக மாற்றிக்கொள்ளமுடியும். இதில் ஈஸ்ட்ரோஜன் மூலம் பெண்ணுக்குரிய உடல் தோற்றம், குரல், சரும மென்மை போன்றவை கிடைப்பதோடு, ஆண்டி-ஆன்ட்ரஜன் மூலம் டெஸ்டோஸ்டிரோன் (Testosterone) ஹார்மோன் கட்டுப்படுத்தப்படுகிறது.

பிறக்கும் போது பெண்ணாக பிறந்த ஒருவர், தனது தற்போதைய அடையாளத்தின் படி, தன்னை ஆணாக மாற்றிக்கொள்ள டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோனைப் பெற்றுக்கொள்கிறார். இதன் மூலம் அவர்களுக்கு மீசை/தாடி வளருதல், உடலில் ரோமங்கள் வளருதல் மற்றும் குரல் மாற்றம் போன்றவை நிகழ்கின்றன. இந்த ஹார்மோன் பயன்பாடு மருத்துவ ஆலோசனையின் கீழ் மட்டுமே நடைபெற வேண்டும். ஹார்மோன் சிகிச்சையினால் ஏற்படும் மாற்றங்கள் நபருக்கு நபர் மாறுபடலாம் மற்றும் அதற்குச் சில காலம் எடுக்கலாம்.

அதேபோல், ஹார்மோன் சிகிச்சையின் ஆரம்பக் காலத்தில் அதிகளவிலான உடல் அசௌகரியங்கள் ஏற்படுவதோடு, குமட்டல், வாந்தி, உடல் வெப்பம் காரணமாக ஏற்படும் கொப்புளங்கள், கால் வலி, முதுகு வலி, அதிக தூக்கம், அதிக தாகம், மாதவிடாய் சுழற்சி சீரற்றதாகுதல், கோபம், சினம், பதற்றம், மன அழுத்தம் போன்ற பல்வேறு உடல் மற்றும் மன மாற்றங்களுக்கு உள்ளாகும் காலப்பகுதியாகும். எனவே, திருநர் சமூகம் ஹார்மோன் சிகிச்சையின் ஆரம்பக் காலத்தில் அவர்களுக்கென ஒருவரோ ஒரு குழுவினது உதவி மற்றும் ஆதரவு என்பது மிகவும் அவசியமாகிறது.

மருத்துவ ரீதியான பால்நிலை மாற்றத்தின் இரண்டாவது படிநிலை, அறுவை சிகிச்சைகள் மூலம் பிறப்புறுப்புகளில் மாற்றங்களைச் செய்துகொள்வதாகும்.

இவை:

- மார்பகங்களை அகற்றும் அல்லது வளர்க்கும் அறுவை சிகிச்சைகள்.
- பால்நிலை மீள்நிர்ணய அறுவை சிகிச்சைகள் (பிறப்புறுப்புகளை மாற்றியமைத்தல்) என இரு வகைப்படும்.

பெண் பாலினத்திலிருந்து ஆண் பால்நிலைக்கு மாறும் நபர்கள் மார்பகத்தை அகற்றும் அறுவை சிகிச்சையை செய்துகொள்வதோடு, ஆண் பாலினத்திலிருந்து பெண் பால்நிலைக்கு மாறும் நபர்கள் மார்பகங்களை வளர்ப்பதற்கான அறுவை சிகிச்சைகளைச் செய்துகொள்கின்றனர். இந்த அறுவை சிகிச்சைகள் கட்டாயமானவையல்ல. ஒருவரை திருநராக அடையாளப்படுத்த அல்லது சட்ட ரீதியாக அங்கீகரிக்க GRC சான்றிதழ் போதுமானது. இலங்கையில் பிறப்புறுப்புகளை மாற்றியமைக்கும் அறுவை சிகிச்சைகளுக்கான வசதி வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளது. மேலும் இந்த அறுவை சிகிச்சைகள் அதிக செலவாகக்கூடிய மற்றும் சிக்கலான ஒரு அறுவை சிகிச்சையாக திகழ்கிறது.

இவ்வாறாக மார்பக அறுவை சிகிச்சை மற்றும் பிறப்புறுப்பு அறுவை சிகிச்சை ஆகிய இரண்டையும் முழுமையாகச் செய்துகொண்ட நபர்களை Transsexual (சிகிச்சை செய்த திருநர்) என அழைப்பார்கள். எனினும், சேவை வழங்கும் அதிகாரிகள் என்ற ரீதியில் நீங்கள் அவர்களை ‘‘திருநங்கை’’ (Transgender Woman) என அழைப்பதே போதுமானது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களிடம் ‘‘நீங்கள் ஹார்மோன் எடுக்கிறீர்களா?’’, ‘‘நீங்கள் பிறப்புறுப்பை மாற்றிவிட்டீர்களா?’’ போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டாம். மேலும் ஹார்மோன் சிகிச்சையோ அல்லது அறுவை சிகிச்சையோ பால்நிலை மாற்றச் செயல்முறையின் கட்டாயமான அங்கங்கள் அல்ல.

* இந்த அத்தியாயத்தில் நீங்கள் கற்றுக்கொண்ட 05 விடயங்களைக் குறிப்பிடுங்கள்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

* <u>முக்கியமானவை</u>

- திருநராவது என்பது ஒரு தனிப்பட்ட தெரிவு அல்ல.
- ஒருவர் திருநராக இருப்பது கர்மா அல்லது பாவ புண்ணியங்களின் அடிப்படையில் அமைவதல்ல.
- திருநராக இருப்பது ஒரு மன நோய் அல்ல.
- பால்நிலை மாற்றம் என்பது நீண்ட காலம் எடுக்கக்கூடிய ஒரு செயல்முறையாகும்.
- அது முறையான வழிகாட்டலின் கீழ் நடைபெற வேண்டிய ஒரு செயல்முறையாகும்.

## iii. Gender non-conforming- உறுதிப்படுத்தப்படாத பால்நிலை

இதன் பொருள் என்னவென்றால், ஒருவர் தனது பால்நிலை அடையாளத்தை இன்னும் கண்டறியாத அல்லது உறுதி படுத்த முடியாத நிலையில் இருப்பதாகும்.
இலங்கை போன்ற நாடுகளில் மக்களுக்கு பால்நிலை அல்லது சமூக அடையாளத்தைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான கல்வி அல்லது தகவல் ஆதாரங்கள் இல்லாததால், பலரும் தங்களது உண்மையான பால்நிலை அடையாளத்தை அடையாளம் காண்பதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலை சில சமயங்களில் அவர்களது வாழ்நாள் முழுவதும் தான் யார் என்ற தேடலைத் தொடரும் ஒரு தேடலாகவும் அமையலாம்.

## iv Gender non-binary - இருமைக்கு அப்பாற்பட்ட பால்நிலை

இருமைக்கு அப்பாற்பட்ட பால்நிலை என்பது, பாரம்பரியமாக ‘‘ஆண்’’ அல்லது ‘‘பெண்’’ என்ற பால்நிலை அடையாளங்களுடன் ஒத்துப்போகாத நபர்களைக் குறிக்கும் ஒரு தனித்துவமான சொல்லாகும். இருமைக்கு அப்பாற்பட்ட அடையாளம் கொண்ட

நபர்கள், தங்களுக்குள் ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலினங்களின் பண்புகளும் இருப்பதாக உணரலாம் அல்லது ஆண்-பெண் என்ற இரு பிரிவுகளுக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பதாக உணரலாம். இது சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அல்லது மாற்றப்பட வேண்டிய ஒரு நிலை அல்ல.

### v <u>Agender- பாலினமற்ற நிலை</u>

ஒரு நபருக்கு எந்த விதமான பால்நிலை அடையாளமும் இல்லாத நிலையை எளிமையாக இவ்வாறு அழைக்கலாம். பால்நிலை என்பது அவர்களின் வாழ்க்கையில் ஒரு தொடர்புடைய பகுதியாக இருப்பதில்லை.

## <u>Sexual Expression - பாலின வெளிப்பாடு</u>

தனிநபர்கள் தங்களது பாலியல் அல்லது பால்நிலை அடையாளத்தை வெளிப்படுத்தும் பல்வேறு முறைகள் உள்ளன. பாரம்பரியமாக, ஒரு ஆண் அல்லது பெண் தனது அடையாளத்தைக் காண்பிக்க விசேட முயற்சிகளை எடுக்கவில்லை அவர்களது நடத்தை, பேச்சு முறை, ஆடை மற்றும் சமூகத்தில் அவர்கள் வகிக்கும் பாத்திரங்கள் மூலம் அவர்களது பால்நிலை பண்புகள் சமூகத்திற்குத் தெளிவாகத் தெரிகின்றன.

எனினும், தங்களை ஆண் அல்லது பெண் அடையாளங்களுக்குள் அடக்கிக் கொள்ளாத, அதேவேளை திருநரும் அல்லாத நபர்கள் உள்ளனர். அவர்கள் தங்களது அடையாளத்தின் காரணமாகப் பல்வேறு வன்முறைகளை எதிர்கொள்கின்றனர்.

இந்த பால்நிலை வெளிப்பாடுகளை மனிதர்கள் உணர்வுப்பூர்வமாக, உடல் ரீதியாக, வாய்மொழியாக மற்றும் சைகைகள் மூலமாகப் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகின்றனர். அவை ஒவ்வொரு நபரின் தனித்துவத்திற்கு ஏற்ப மாறுபடலாம். அதேபோல், பால்நிலை வெளிப்பாடுகள் சமூகத்தில் நிலவும் மதிப்புகள்,

கலாச்சாரம், நம்பிக்கைகள் மற்றும் தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்பவும் மாறுபடுகின்றன.

பால்நிலை வெளிப்பாடுகள் பல்வேறு வடிவங்களை கொண்டது.

- நடத்தைகள் - கட்டித்தழுவுதல், முத்தமிடுதல், தொடுதல், ஜாடைகள் காட்டுதல் போன்றவற்றின் மூலம்.
- தொடர்பாடல் - தான் விரும்பும் விடயங்களைப் பேசும் விதம், விருப்பு வெறுப்புகள் அல்லது நிலைப்பாடுகள் மூலம்.
- ஆடை அலங்காரம் - தனது பால்நிலை அடையாளத்தைக் வெளிக்காட்டும் வகையிலான மாறுபட்ட மற்றும் கவர்ச்சிகரமான ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் மூலம்.

## Androgynous- அன்ரோஜினஸ் (இருபால்நிலை பண்பிணைந்தோர்)

பாரம்பரியமான பெண் மற்றும் ஆண் ஆகிய இரு பாணி வெளிப்பாடுகளின் கலவையைக் கொண்ட நபர்கள். இவர்களது வெளிப்புறத் தோற்றம், அலங்காரம், ஆபரணங்கள் மற்றும் பேச்சுவழக்கு போன்றவை ஆண் மற்றும் பெண் ஆகிய இரு தன்மைகளின் தொகுப்பாக வெளிப்படும்.

- முழுமையாக ஒரு பெண் அல்லது ஒரு ஆணாக அடையாளம் காண முடியாத வகையில் ஆடை அணிதல்.
- ஒரு நபரின் முகபாவனைகள், உடல் அமைப்பு, குரல் அல்லது நடத்தை போன்றவை அடிப்படியாகக் கொண்டு ஆண் அல்லது பெண் என்ற இரண்டில் ஒன்றிற்கு மட்டும் வரையறுக்க முடியாமை.

இவர்கள் சமூகத்தில் பல சந்தர்ப்பங்களில் ஒதுக்கப்படுவதோடு, பாகுபாடுகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். பாரம்பரியமான ஆண் அல்லது பெண் என்ற இரு கட்டமைப்புகளுக்குள் அடங்காத காரணத்தால், சமூகம் இவர்களை ‘‘விசித்திரமான’’ நபர்களாகக் கருதி, அடிக்கடி கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாக்குகிறது.

## Nachchi - நச்சி சமூகம்

பாலின அடையாளமாகவும், பல்வேறு பால்நிலை அடையாளங்களின் ஒரு வடிவமாகவும் கருதப்படும் ‘‘நச்சி’’ சமூகம் என்பது இலங்கையின் கலாச்சாரம் மற்றும் வரலாற்றுடன் பிணைக்கப்பட்டதொரு பாரம்பரிய சமூகமாகும். அதேபோல், வரலாற்றுக் காலம் தொட்டே பல்வேறு புறக்கணிப்புகளுக்கும் பாகுபாடுகளுக்கும் உள்ளானதொரு பாலினக் குழுவாகவும் கருதப்படுகிறது.

உயிரியல் ரீதியாக ஆணாகப் பிறந்திருந்தாலும், பெண்மைப் பண்புகளையும் தோற்றத்தையும் கொண்ட இந்த நபர்கள், பால்நிலை மாற்றச் செயல்முறைக்கு (Transition) செல்ல விரும்புவதில்லை. இவர்கள் பெரும்பாலும் குழுக்களாக இருக்கவே விரும்புகிறார்கள். இந்தியாவின் ‘‘ஹிஜ்ரா’’ சமூகத்திற்கு இணையாக இலங்கையின் நச்சி சமூகத்திற்கும் பல நூற்றாண்டுகள் பழமையான வரலாறு உண்டு.

இராச்சியக் காலங்களில் அந்தப்புரங்களைப் பாதுகாக்கவும், வாயிற்காப்போராகவும் ‘‘நச்சி’’ சமூகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அநேகமான சந்தர்ப்பங்களில் பெரஹெர போன்ற விழா நிகழ்வுகளில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை முன்வைப்பவர்களாக இவர்கள் அடையாளம் காணப்படுவதோடு, தற்போதும் பெரஹெர கலாச்சாரத்தில் புகழ்பெற்ற ‘‘குதிரை நடனம்’’ (அஸ்வ நெட்டும) மற்றும் ‘‘மயில் நடனம்’’ (மொனர நெட்டும) போன்றவற்றை பெரும்பாலும் இந்த நச்சி சமூகத்தினரே முன்வைக்கின்றனர்.

இலங்கையின் மலையகப் பகுதிகள் மற்றும் கொழும்பின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் நச்சி சமூகத்தினர் குழுக்களாக வாழ்கின்றனர். இவர்களை இலங்கையின் LGBTIQ+ சமூகத்தின் ஆதி குடிகள் என அழைக்கலாம்.மேலும் இவர்கள் சமூகத்தால் ஒதுக்கப்பட்டாலும், கலாச்சார வளர்ச்சியில் அடையாளம் காணப்பட்ட ஒரு சிறுபான்மைப் பாலினக் குழுவாக திகழ்கின்றனர்.

எவ்வளவு கலாச்சாரப் பங்களிப்புகளைச் செய்தாலும், நச்சி சமூகம் பெருமளவில் பாகுபாடு, வன்முறை மற்றும் சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாகும் ஒரு சமூகமாகவே இன்றுவரை காணப்படுகிறது. பாலியல் தொழிலில் ஈடுபடவும், வீதியோரக் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடவும் இவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.இவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் என நோக்கும் போது, அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவது மிக அரிதாகும். அதேபோல் காவல்துறை உட்பட ஏனைய அரச சேவை நிறுவனங்களால் துன்புறுத்தலுக்கும் கேலிக்கும் உள்ளாகும் இந்தச் சமூகத்திற்கு, சமூகத்தில் எவ்வித வரப்பிரசாதங்களும் வழங்கப்படவில்லை.

## 02. LGBTIQ+ சமூகம் குறித்த வரலாற்று மற்றும் கலாச்சார பின்னணி.

LGBTIQ+ சமூகம் குறித்து சமூகத்தில் வேரூன்றியிருக்கும் ஒரு கட்டுக்கதை என்னவென்றால், இந்தச் சமூகம் குறித்த கருத்துக்கள் மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்தவை என்பதாகும். அதாவது மேற்கத்தியக் கலாசாரத்தை இலங்கைச் சமூகத்திற்குள் கொண்டு வந்து எமது கலாச்சாரம் மற்றும் ஒழுக்க விழுமியங்களை அழிக்க முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. இது வரலாற்று உண்மைகளை மீறும் ஒரு தவறான கருத்தாகும்.

இலங்கையானது ஹெலதிவயின, தம்பபன்னி, லங்கா, சிலோன் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. இலங்கை போர்ச்சுகீசியர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்களுக்குக் காலனித்துவ நாடாக மாறுவதற்கு முன்னர், இங்கு சுதந்திரமான மற்றும் வெளிப்படையான பாலியல் உறவுகள் இருந்தன என்பதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

‘‘எககெயி கேம’’ (ஒரு வீட்டில் உண்ணுதல்/கணவர் பல மணமுடித்தல்), ‘‘பின்ன விவாஹய’’, ‘‘பகு புருஷ விவாஹய’’ (கணவர் பல மணமுடித்தல்), ‘‘பகு ஸ்த்ரீ விவாஹய’’ (பல தாரங்களை மணத்தல்), ‘‘யகட தோலின் பாவாதீம’’ போன்ற பல்வேறு கலாச்சார மற்றும் சமூக நடைமுறைகள், நாம் எவ்வளவு சுதந்திரமான மற்றும் பாலியல் விடயங்களில் திறந்த மனதுடைய ஒரு சமூகமாக இருந்தோம் என்பதைக் காட்டுகின்றன.

தன்பாலின உறவுகள் குறித்த ஏராளமான வரலாற்று ஆதாரங்களும் காணப்படுகின்றன. ‘‘நாலந்தகெடிகே’’ போன்ற புகழ்பெற்ற சிற்பங்கள் மூலம் தன்பாலின நபர்களுக்கு இடையிலான பாலியல் உறவுகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. வரலாற்று இடைக்காலத்தில் ஒரு வழிபாட்டுத் தலத்தில் இத்தகைய சிற்பங்களைச் செதுக்க

அனுமதி கிடைத்தது என்பது, அக்காலத்தின் பாலியல் உறவுகள் குறித்து நிலவிய சுதந்திரமான மனப்பாங்கைக் காட்டுகிறது.
‘‘வினய பிடக’’ எனப்படும் ஒழுக்க விதிகளில், பௌத்த பிக்குகளுக்கு இடையிலான தன்பாலின உறவுகள் ஒழுக்க விதிகளுக்கு முரணானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதில் இல்லறத்தில் உள்ள பொதுமக்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும், அந்த விதிகள் பிக்குகளின் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்காகவே கூறப்பட்டுள்ளனவே தவிர, சட்ட ரீதியாகவோ அல்லது வெறுப்புணர்வோடு நோக்குவதற்காகவோ அல்ல. எவ்வாறாயினும், வினய பிடகவில் இது குறிப்பிடப்பட்டிருப்பது, பழங்கால சமூகத்தில் தன்பாலின உறவுகள் காணப்பட்டன என்பதற்குச் சான்றாக அமைகிறது.

தாழ்நில சாந்திகர்மங்கள், கோலம் மற்றும் நாடகங்களில் திருநர் மற்றும் குறுக்கு ஆடை அலங்காரங்களை (Cross-dressing) மேற்கொள்ளும் பாத்திரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இன்றும் கூட பெண் பாத்திரங்களில் நடிக்கும் ஆண்கள் மற்றும் அவர்களது பெண்மைத் தோற்றம் குறித்துச் சமூகத்தில் ஒரு நடுநிலையான கருத்து நிலவுவதைக் காணலாம்.

1547 நவம்பர் 27 அன்று இலங்கையிலிருந்த ஒரு போர்ச்சுகீசிய சிப்பாய், கோவாவிலிருந்த உப-ஆளுநர் டி. ஜொவாவோ டி கஸ்கோ என்பவருக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

‘‘தன்பாலின ஈர்ப்புள்ளவர்கள் கோட்டை இராச்சியம் முழுவதும் பரவியுள்ளனர், இங்கு வாழ்வது குறித்து எங்களுக்கு அச்சமாக இருக்கிறது. இராச்சியத்தின் ஒரு முக்கிய தலைவரிடம் சென்று இத்தகைய நாகரீகமற்ற செயல் குறித்து ஏன் வெட்கப்படவில்லை எனக் கேட்டபோது, ‘‘அரசர் எதையேனும் செய்தால் அது எமது வழக்கம்’’ என்றே அவர் பதிலளித்தார்.’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது அன்றைய ஏழாம் புவனேகபாகு மன்னர் குறித்த முதல் கருத்தாகும்.

அதேபோல் இலங்கையில் கைதியாக இருந்த ரொபர்ட் நொக்ஸ், 1681 இல் வெளியிட்ட “இலங்கைத் தீவின் வரலாற்றுத் தொடர்புகள்” (An Historical Relation of the Island Ceylon) என்ற நூலில், தன்பாலின ஈர்ப்பை “சோதோமி (Sodomy) குற்றங்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

“மன்னரின் பெரும்பாலான ஊழியர்களாக சிறுவர்களும், இளைஞர்களும், நல்ல குடும்பங்களில் பிறந்த அழகான ஆண்களுமே காணப்பட்டனர். திசாவைகள் அல்லது நாட்டுத் தலைவர்கள் மூலம் இத்தகைய சிறுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல தோற்றமும் மற்றும் சிறந்த குடும்பப் பின்னணி கொண்டவர்களே அரண்மனைக்கு அனுப்பப்படுவார்கள். இந்தச் சிறுவர்களின் தலை சிகை வழிக்கப்பட்டு, பின்னால் தொங்கும் வகையில் சிறிதளவு முடி விடப்பட்டிருக்கும். மன்னருக்கு தன்பாலின நடத்தைகள் தொடர்பாக எவ்வித குற்றவுணர்வும் இருக்கவில்லை, அவர்களுக்கிடையில் இத்தகைய விடயங்கள் பேசப்படுவதை நீங்கள் ஒருபோதும் கேட்டிருக்கமாட்டீர்கள்.”என ரொபர்ட் நொக்ஸ் இங்கு இரண்டாம் இராஜசிங்க மன்னர் குறித்து எழுதியுள்ளார்.

மேற்கூறிய இரண்டு ஆதாரங்களுமே அக்காலப்பகுதியில் “சோதோமி” குற்றங்கள் என்ற கருத்தை முன்வைக்கின்றன. ஏனெனில், இங்கிலாந்தும் போர்ச்சுகலும் அக்காலத்தில் கடுமையான கிறிஸ்தவ மத நம்பிக்கைகளின் அடிப்படையில் தன்பாலின ஈர்ப்பை ஒரு பாவமாகக் கருதின. ஆனால் இப்போது அந்த இரு நாடுகளுமே தன்பாலின ஈர்ப்புள்ளவர்களுக்கு எதிரான சட்டங்களை மாற்றி அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்தியுள்ளன. சுதந்திரமான பாலியல் உறவுகளைக் கொண்டிருந்த எமது நாடுகள், அவர்கள் விட்டுச் சென்ற சட்டங்களின் அடிப்படையில் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து நூல்களான ‘‘மனுஸ்மிருதி’’ மற்றும் ‘‘காமசூத்திரா’’ ஆகிய இரண்டிலுமே பால்நிலை அடையாளம் (திரிதிய பிரகிருதி) அல்லது திருநர்கள் குறித்து அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தானில் வாழும் ‘‘ஹிஜ்ரா’’ என்ற சிறுபான்மைப் பாலினக் குழுவினர், இந்து கலாச்சாரத்தில் மத மற்றும் சமூக ரீதியான பங்களிப்புகளுக்காகப் பெரும் கவனம் பெறுகின்றனர்.

‘‘அர்த்த நாரீஸ்வரர்’’ தத்துவத்தின் மூலம் (இலங்கையிலும் அர்த்த நாரீஸ்வர சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன) சிவன் மற்றும் பார்வதி ஆகிய இருவரினதும் கலவையாக முன்வைக்கப்படுகிறது. அர்த்த நாரீஸ்வரர் என்பது ஆண்மை மற்றும் பெண்மை ஆகிய இரண்டும் இணைந்த ஒரு தெய்வீக வடிவத்தைக் காட்டும் அடையாளமாகும். சமஸ்கிருத நூலான ‘‘காமசூத்திராவில்’’ தன்பாலினத்தவர்களுக்கிடையே ஏற்படும் காதல் மற்றும் பாலியல் உறவுகள் குறித்த ஓர் அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்து தத்துவத்தில் வரும் ‘‘ஸ்கந்த புராணம்’’ நூலின் படி, பகீரத மன்னன் இரு பெண்களின் இணைப்பினால் பிறந்தவர் எனக் குறிப்பிடப்படுகிறது. அதேபோல், இந்து தத்துவத்தின் ‘‘பக்தி’’ கவிதைகளில் அர்ஜுனன் மற்றும் கிருஷ்ண பகவானுக்கு இடையிலான காதல் உறவு விவரிக்கப்பட்டுள்ளது. சில கதைகளின்படி, கிருஷ்ணர் பெண்மைப் பண்புகளை வெளிப்படுத்திய ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருசாராருடனும் பழகிய ஒரு இருபால் ஈர்ப்புள்ளவராக (Bisexual) சித்தரிக்கப்பட்டுள்ளார். தென்னிந்திய கலாச்சாரத்தில், திருமணங்கள் மற்றும் குழந்தைகள் பிறக்கும் சந்தர்ப்பங்களில் ஆசீர்வாதம் பெறுவதற்காக ஹிஜ்ராக்கள் வீட்டிற்கு அழைக்கப்படுகின்றனர். மேலும், ஹிஜ்ரா நபராகக் கருதப்படும் ‘‘அரவான்’’ தெய்வத்தை வழிபடுவதற்காகத் தமிழ்நாட்டில் ‘‘கூவாகம் திருவிழா’’ என்ற கலாச்சார விழா நடத்தப்படுகிறது.

கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதங்களில் இன்றும் LGBTIQ+ சமூகம் குறித்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இருப்பினும், ரோமன் கத்தோலிக்க மதம் படிப்படியாக LGBTIQ+ சமூகம் குறித்து ஒரு சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டு வருகின்றது. அவர்களைப் பொறுத்தவரை LGBTIQ+ சமூகம் கண்ணியத்துடனும் உணர்திறனுடனும் நடத்தப்பட வேண்டிய ஒரு சமூகமாகும். குறிப்பாகப் திருத்தந்தை பிரான்சிஸ் 2013 ஆம் ஆண்டில், "ஒரு நபர் தன்பாலின ஈர்ப்புடன் பிறப்பது கடவுளின் விருப்பம் என்றால், அதற்கு தீர்ப்பளிக்க நான் யார்?" என்று பகிரங்கமாகத் தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டில், திருத்தந்தை பிரான்சிஸ் LGBTIQ+ சமூகத்தினரும் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெறத் தகுதியுள்ளவர்கள் என்று குறிப்பிட்டார்.

# 03. LGBTIQ+ சமூகத்தின் வாழ்வியல் யதார்த்தம்.

1883 ஆம் ஆண்டில், அப்போதைய சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கைக்குத் தண்டனைச் சட்டக் கோவையை அறிமுகப்படுத்தியவர்கள் பிரித்தானியர்கள் ஆவர். இலங்கை அப்போது பிரித்தானிய காலனித்துவ நாடாக இருந்ததால், 1860 இல் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை எமது நாட்டுக்கும் வழங்கப்பட்டது. இந்தத் தண்டனைச் சட்டக்கோவையை எழுதியவர் தோமஸ் மெக்காலே என்ற தீவிர மதக் கொள்கையுடைய பிரபு ஆவார்.

இந்தத் தண்டனைச் சட்டக்கோவையின் 365 மற்றும் 365(அ) பிரிவுகள் தன்பாலின உறவைத் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதுகின்றன. அந்தப் பிரிவுகளில் எத்தகையதன்பாலின உறவுகளும் குற்றமாகும், அதில் தன்பாலின உறவுகளை அடையாளம் காணுவதற்கான மற்றும் அது குற்றம் என நிரூப்பிப்பதற்கான வரைவிலக்கணங்களில் குறைபாடுகள் இருந்த போதிலும், இன்றும் காவல்துறையினர்தன்பாலின ஈர்ப்புள்ளவர்களைக் கைது செய்ய இந்தப் பிரிவுகளைப் பயன்படுத்துகின்றனர். அந்தப் பிரிவுகளில் வரும்:

1. இயற்கைக்கு மாறான குதவழி பாலியல் உறவு.
2. நபர்களுக்கு இடையிலான கடுமையான அநாகரீகச் செயல்கள்.

போன்ற கருத்துக்களுக்குச் சரியான வரைவிலக்கணங்கள் வழங்கப்படாததால், இலங்கையில் வாழும் LGBTIQ+ சமூகம் சட்டத்தின் முன்னிலையிலும் சமூகத்திலும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறது. இந்தச் சட்டங்களை அறிமுகப்படுத்திய பிரித்தானியர்கள் கூடத் தமது சட்டங்களைத் திருத்தி, தன்பாலீர்ப்பாளர்கள் திருமணம் செய்துகொள்ளும் உரிமையைக் கூட வழங்கியுள்ளனர்.

தண்டனைச் சட்டக்கோவையின் 365&365(அ) பிரிவுகளுக்கு இணையாக இருந்த இந்தியாவின் தண்டனைச் சட்டக்கோவையின் 377 ஆவது பிரிவும் திருத்தப்பட்டுள்ளது. தற்போது இந்தியாவில் தன்பாலின உறவு ஒரு குற்றமாகக் கருதப்படுவதில்லை.

மேலதிகமாக, ‘‘அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம்’’ (Vagrants Ordinance) மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் 399 ஆவது பிரிவான ‘‘ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்ற முயற்சித்தல்’’ போன்ற சட்டங்கள், திருநர் சமூகம், நச்சி சமூகம் மற்றும் அன்ரோஜினஸ் சமூகத்தினரைக் கைது செய்யவும், காவல் நிலையத்தில் தடுத்து வைக்கவும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

தண்டனைச் சட்டக்கோவையின் 365 ஆவது பிரிவைத் திருத்தவும், 365(அ) பிரிவை நீக்கவும் 2023 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்திற்கு அனுமதி அளித்த போதிலும், இலங்கை நாடாளுமன்றம் இதுவரை அதற்கான முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

# 04. இலங்கையில் வாழும் LGBTIQ+ சமூகம் எதிர்கொள்ளும் பொதுவான சவால்கள்

- **சமூக அவப்பெயர்**.

ஒரு நபர் தன்பாலின ஈர்ப்புள்ளவராகவோ அல்லது திருநராகவோ அல்லது வேறு பாலின அடையாளங்களைக் கொண்டவராகவோ இருப்பது, இலங்கையின் சமூகச் சூழலில் அந்த நபருக்குப் பெரும் அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலையாக மாறியுள்ளது. இவர்களை அவமதிப்பதற்காகச் சமூகத்தில் பல்வேறு ஆபாசமான மற்றும் அகௌரவமான சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இந்த நபர்கள் வாய்மொழி ரீதியாகவும், மன ரீதியாகவும், பல சந்தர்ப்பங்களில் உடல் ரீதியாகவும் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதைக் காணலாம்.

- **குடும்பத்திலிருந்து ஒதுக்கப்படுத்தல்.**

இலங்கையில் குடும்பக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ள விதம் மற்றும் குடும்பத்திற்குள் பொறுப்புகள் மற்றும் பாத்திரங்கள் பகிரப்படும் விதம், LGBTIQ+ பிள்ளைகளுக்குச் சாதகமானதாக இல்லை. பரம்பரையைத் தொடர்தல், குடும்பப் பெயர், சொத்துக்கள், சமூக அந்தஸ்து மற்றும் கௌரவம், சமூக அங்கீகாரம், குடும்பத்தின் ஏனைய பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்காலம் போன்ற பல காரணிகளின் அடிப்படையில், ஒரு குடும்பம் ஒரு எதிர்பாலீர்ப்பு மற்றும் நிலைத்த சமூகப்பாலின (Cisgender) பிள்ளையையே எதிர்பார்க்கிறது.

ஆனால், மரபணு காரணங்கள் அல்லது பிற உளவியல் காரணங்களின் அடிப்படையில் தனது குடும்பத்தில் தன்பாலின ஈர்ப்புள்ள அல்லது திருநர் சமூக இல்லையேல் ஒரு ஊடுபால் (Intersex) பிள்ளை இருப்பதைப் பெற்றோர்கள் ஒரு பெரிய

குற்றமாகவும் அவமானமாகவும் கருதுகின்றனர். இதன் காரணமாக LGBTIQ+ பிள்ளைகள் குடும்பத்திற்குள் பெரும் புறக்கணிப்புக்கு உள்ளாகிறார்கள்.

தொடர்ச்சியாகத் தாக்குதல், திட்டுதல், அவதூறு பேசுதல், சொத்துக்களை வழங்க மறுத்தல், குடும்ப நிகழ்வுகளிலிருந்து விலக்கி வைத்தல், வீட்டை விட்டு வெளியேற வற்புறுத்துதல் மட்டுமல்லாது, பல்வேறு சிகிச்சைகளுக்குக் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லுதல், ''தொவில்'', பேய் ஓட்டுதல் போன்ற மாந்திரீகச் சடங்குகளைச் செய்தல் போன்ற தவறான செயல்களை காண முடிகிறது. அதேபோல் கட்டாயத் திருமணம் செய்து வைத்தல் மற்றும் பல்வேறு வழிகளில் மன அழுத்தத்திற்கு உள்ளாக்குதலும் நடைபெறுகின்றது.

குடும்பத்தினால் இத்தகைய வன்முறைக்கும் அழுத்தத்திற்கும் உள்ளாகும் LGBTIQ+ பிள்ளைகள் அது குறித்துக் காவல்துறைக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ புகார் அளிப்பதில்லை.காரணம் இலங்கையில் அவ்வாறு புகார் அளிப்பதன் மூலம் தமக்கு நீதி கிடைக்குமா என்ற நம்பிக்கை LGBTIQ+ பிள்ளைகளிடம் இல்லை. குடும்பத்திலிருந்து ஒதுக்கப்படுவதாலும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாலும் பல LGBTIQ+ சமூக பிள்ளைகள் நீண்டகாலமாக மனநோய்களால் பாதிக்கப்படுகின்றனர், சிலர் தற்கொலைக்கும் முயற்சி செய்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக, தனது சொந்தக் குடும்ப உறுப்பினர்களாலேயே பாலியல் வன்புணர்வுக்கும் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளான LGBTIQ+ பிள்ளைகள் பற்றிய தகவல்களும் எமது நிறுவனத்திடம் உள்ளது.

எனவே, சேவை வழங்கும் ஒரு நபர் என்ற ரீதியில் நீங்கள் LGBTIQ+ நபர்கள் மீது உணர்திறன் (Sensitive) கொண்டிருப்பது அவசியமாகும். ஏனெனில் அவர்கள் வாழ்நாள் முழுவதும்

குடும்பத்திலிருந்து வரும் பல்வேறு சவால்களுடன் போராடும் அப்பாவி மக்கள் ஆவர்.

- **கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் பாகுபாடுகள்.**

குடும்ப அமைப்பைப் போலவே சமூக விழுமியங்கள், கலாச்சாரம், பாத்திரங்கள், பால்நிலை மற்றும் பாலின விழுமியங்களை வழங்கி மேம்படுத்தும் மிக முக்கியமான நிறுவனமாக பாடசாலைகள் திகழ்கின்றன. இலங்கையில் முறையான பாலியல் கல்வி இல்லாத காரணத்தினால், பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் உரிமைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இதன் காரணமாக பல்வேறு பால்நிலை அடையாளங்களைக் கொண்ட நபர்கள் தொடர்பான சரியான தகவல்களும் அறிவும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

மேலும், பாடசாலை என்பது பாரம்பரிய ஆண்-பெண் விதிமுறைகளை (Gender Norms) ஊக்குவிக்கும் இடமாக இருப்பதால், ஏதேனும் ஒரு மாணவர் தன்பாலீர்ப்பு கொண்டவராகவோ அல்லது திருநர் போன்ற பல்வேறு பால்நிலை அடையாளங்களை கொண்டவர்களாக இருந்தால், ஏனைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் பாகுபாடுகளுக்கும் உள்ளாக நேரிடுகிறது. இதனால் பாடசாலைக் கட்டமைப்பிற்குள் இருக்கும் LGBTIQ+ மாணவர்களின் கற்றல் முன்னேற்றம் மற்றும் புள்ளிகள் குறைவடையக்கூடும் என்பதோடு, அவர்கள் மனரீதியாகப் பாதிப்படையவும் வாய்ப்புள்ளது.

ஈக்விட்டி நிறுவனம் 2023 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வின்படி:

ஆய்வில் பங்கேற்ற LGBTIQ+ நபர்களில் 54% பேர் கல்வி நிறுவனங்களில் சமமான கற்றல் உரிமைகள் தமக்குக் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அதில் 22% பேர் தமது கல்வியைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளனர்.

70% க்கும் அதிகமானோர் தமது பால்நிலை அடையாளம் அல்லது பாலியல் நோக்குநிலை காரணமாக வன்முறைக்கு ஆளாகியிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

- **சுகாதார சேவை நிறுவனங்களில் நிலவும் சமமற்ற நிலை.**

LGBTIQ+ சமூகத்தினரைச் சமமற்ற முறையில் நடத்தும் அரச நிறுவனங்களில் அரச வைத்தியசாலைகள் முன்னிலை வகிக்கின்றன. தனிநபர்களின் வெளித்தோற்றம், பேசும் விதம் மற்றும் நடக்கும் விதம் ஆகியவற்றின் அடிப்படையில் பல LGBTIQ+ நபர்கள் சுகாதார சேவை நிறுவனங்களில் வாய்மொழி ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதைக் காணலாம். புறக்கணிக்கப்படுவதும் தேவையின்றி அலைக்கழிக்கப்படுவதும் இதில் முக்கியமானது.

இவ்வாறான சம்பவங்களால் பெரும்பாலும் திருநங்கைகள், திருநம்பிகள், இருமைக்கு அப்பாற்பட்டோர் (Non-binary) மற்றும் ‘நச்சி’ சமூகத்தினரே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக பால்நிலை அடையாளச் சான்றிதழை (GRC) பெறுவதற்காக மாதாந்தம் மனநலச் சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லும் திருநங்கைகள்/திருநம்பிகள், வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் வாய்மொழி வன்முறைகளுக்கும் அவமதிப்புகளுக்கும் உள்ளாவது சாதாரணமாக மாறிவிட்டது.

மேலும், தனிநபரின் அடையாளத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதும் சுகாதாரத் துறையில் காணப்படும் ஒரு பெரிய பிரச்சினையாகும். இலங்கையின் சுகாதாரத் துறையில் திருநர்களுக்கான ஹார்மோன் சிகிச்சை மற்றும் அறுவை

சிகிச்சைகளுக்கு இன்னும் முன்னுரிமை அளிக்கப்படாததால், மருத்துவ ரீதியான பால்நிலை மாற்றச் செயன்முறைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் பல திருநங்கைகள்/திருநம்பிகள் அலைக்கழிக்கப்படுவதோடு, அவர்களின் அறுவை சிகிச்சைகள் நிறுத்தப்படுவதும் அல்லது காலம் தாழ்த்தப்படுவதும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

## 05. LGBTIQ+ சமூகம் குறித்த பொதுவான கட்டுக்கதைகள் பற்றிய உயர் நீதிமன்றத்தின் கருத்து எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

**2023 ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை திருத்தச் சட்டமூலத்திற்கு** உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மிகவும் விசேடமான ஒரு தீர்ப்பாகும். தண்டனைச் சட்டக்கோவையின் 365 ஆம் பிரிவைத் திருத்துவதற்கும் மற்றும் 365அ பிரிவை நீக்குவதற்கும் கொண்டு வரப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை திருத்த முன்மொழிவுக்கு எதிராக, இந்த முன்மொழிவு அரசியலமைப்பிற்கு முரணானது எனக் கூறி சில மனுதாரர்களால் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில், குறித்த மனுவுக்கு எதிராகவும் LGBTIQ+ சமூக அமைப்புகள், சமூக செயற்பட்டாளர்கள் , சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பல்வேறு துறைசார் நிபுணர்களால் பல இடைக்கால மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுவின் முதலாவது வாதம் என்னவென்றால், 365 மற்றும் 365அ பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் 16 வயதுக்கு குறைந்த நபர்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகளை, குறித்த சட்டமூலத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் இல்லாது செய்துவிடும் என்றும், அதன் மூலம் குழந்தைகளைச் சுரண்டுவதற்கு இடமளித்து, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சட்டத்தில் ஒரு வெற்றிடம் ஏற்படலாம் என்பதாகும்.

அந்த வாதத்திற்குப் பதிலாக, 1995 ஆம் ஆண்டில் தண்டனைச் சட்டக்கோவையில் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களின் மையம் பெண்களும் குழந்தைகளும் என்றும், ஒரு தரப்பினர் 16 வயதுக்கு

குறைவாக இருக்கும் போது தண்டனையை அதிகரிப்பதற்காக 365 மற்றும் 365அ பிரிவுகளின் மூலம் ‘‘பாரிய பாலியல் துஷ்பிரயோகம்’’ எனும் குற்றம் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் கற்றறிந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி ஹரிப்பிரியா ஜயசுந்தர தெரிவித்தார். 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 365ஆ பிரிவின் படி, 16 வயதுக்கு குறைந்த ஒரு குழந்தை தொடர்பில் பாரிய பாலியல் துஷ்பிரயோகம் எனும் குற்றம் ஸ்தாபிக்கப்படுவதுடன், ஏதேனும் ஒரு பாலியல் செயற்பாடு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் சம்மதம் என்பது செல்லுபடியாகாது என கற்றறிந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மேலும் தெரிவித்தார் (365ஆ(1)(அஅ) பிரிவைப் பார்க்கவும்). ஒரு நபரின் செயலை 365ஆ பிரிவின் கீழ் உள்ள வரைவிலக்கணத்திற்குள் கொண்டு வர முடியாத போது, வாய்மொழியாகவோ அல்லது செயல்கள் மூலமாகவோ முன்னெடுக்கப்படும் ஏதேனும் ஏற்றுக்கொள்ள முடியாத பாலியல் சீண்டல்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக, பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விதந்துரைகளை வழங்கும் தண்டனைச் சட்டக்கோவையின் 345 ஆம் பிரிவைப் பயன்படுத்த முடியும் என்பது அவரது கருத்தாக இருந்தது. அதன்படி, மனுதாரர்களின் வாதம் அடிப்படையற்றது மற்றும் எந்தவொரு சட்டப் பின்னணியும் அற்றது என உயர் நீதிமன்றத் தீர்ப்பில் வழங்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த சட்டத்தரணியின் இரண்டாவது வாதம் என்னவென்றால், 365 மற்றும் 365அ பிரிவுகளின் திருத்தமானது, சட்டத்தின் ஆட்சியை (Rule of Law) குறைத்து பிரஜைகளின் வாழ்க்கை மற்றும் சுதந்திரத்தை ஆபத்தில் தள்ளும் என்பதாகும். இந்த வாதம் மிகவும் பலவீனமான ஒன்றாகும் என்பதோடு, இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கும் சட்டத்தின் ஆட்சி மீறப்படுவதற்கும் இடையிலான தொடர்பைக் காட்டுவதற்கு மனுதாரர்கள் தவறிவிட்டனர்.

மூன்றாவது வாதம் என்னவென்றால், HIV மற்றும் எய்ட்ஸ் (AIDS) தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு ஆண் மற்றும் இருபாலினச் சேர்க்கை நடவடிக்கைகளில் ஈடுபட்ட வரலாறு இருப்பதாகவும், தன்பாலீர்ப்பு நபர்களுக்கிடையில் ஏற்படும் பாலியல் உறவுகள் காரணமாக HIV மற்றும் எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்பதாகும். இதன் மூலம் தனிநபர்கள், குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் சமூகப் பொருளாதார நிறுவனங்கள் மட்டுமன்றி இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளை அழித்து தேசிய பாதுகாப்பிற்குப் பாரிய பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும், இலங்கை பிரஜை ஒருவர் தனது இருப்புக்கான முழுமையான ஆற்றலை அடைவதற்கு உதவும் பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தும் விதந்துரைகள் இன்றி, அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பை உண்மையாக அனுபவிக்க முடியாது என்றும் மேலதிகமாகத் தெரிவிக்கப்பட்டது.

இடைக்கால மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்த சட்டத்தரணிகளான திரு. புலஸ்தி ஹேவாமான்ன, திருமதி அர்மிசா டீகல், திரு. என்.கே. அசோக்பரன் ஆகியோர், சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 'இலங்கைக்கான தேசிய எச்ஐவி / பாலியல் தொற்று நோய்கள் தொடர்பான மூலோபாயத் திட்டம் (2018-2022)' மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மற்றும் பொதுநலவாய நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் அந்த வாதத்திற்கு எதிராக மூன்று முக்கியமான வாதங்களை முன்வைத்தனர்.

அதன்படி, எச்ஐவி தொற்றுக்குள்ளாகும் நபர்கள் தன்பாலின ஈர்ப்புள்ள ஆண்கள் மாத்திரமல்ல என்றும், பெண் பாலியல் தொழிலாளர்கள், மீண்டும் நாட்டுக்குத் திரும்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஊசி மூலம் போதைப்பொருள் ஏற்றிக் கொள்ளும் நபர்களும் எச்ஐவி தொற்றுக்குள்ளாகும் அபாயத்தைக் கொண்டுள்ளனர் என்பதாகும். முன்வைக்கப்பட்ட இரண்டாவது விடயம் என்னவென்றால், தனது விருப்பத்துடன் தன்பாலினச்

சேர்க்கையில் ஈடுபடும் இரண்டு வயதுவந்த ஆண்களைக் குற்றவாளிகளாகக் கருதுவதன் மூலம், அந்த நபர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவதுடன், அவர்களுக்கு எச்ஐவி தொற்றினாலும் சிகிச்சைக்கான அணுகல் இல்லாது போகும் என்பதாகும். மூன்றாவது விடயம் என்னவென்றால், அவ்வாறு தொற்றுக்குள்ளாவதற்கு அதிக அபாயமுள்ள நபர்கள் மற்றும் குழுக்களை அணுகுவதற்கு 365 மற்றும் 365அ பிரிவுகளின் திருத்தங்கள் மூலம் இலகுவாக இடமளிக்க முடியும் என்பதாகும்.

365 மற்றும் 365அ பிரிவுகள் எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தொற்றுக்கு இடமளிக்கும் என்றும், அந்தப் பிரிவுகளை நீக்கினால் இலங்கை ஆயுதப் படைகளும் பொலிஸாரும் எச்ஐவி தொற்றால் அழிக்கப்படுவார்கள் என்பதும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத விடயமாகும் என்றும், தமது வாதத்தை உறுதிப்படுத்துவதற்கு மனுதாரர்களால் அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் முன்வைக்கப்படாமை ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல என்பதும் கௌரவ உயர் நீதிமன்றத்தின் கருத்தாக இருந்தது.

உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நான்காவது வாதம் என்னவென்றால், தன்பாலினச் சேர்க்கை நடவடிக்கைகள் பௌத்த மதத்தின் கோட்பாடுகளுக்கு முரணானது என்றும், அதன்படி அது அரசியலமைப்பின் 9 ஆம் பிரிவை மீறுகிறது என்பதாகும். அதில் “இலங்கை குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மை இடத்தினை வழங்கும். அதற்கமைய, 10 ஆம் மற்றும் 14 ஆம் உறுப்புரைகளாலும் 14 (1) (இ) உறுப்புரையினாலும் சகல மதங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதிப்படுத்தும் அதேவேளை, புத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் போஷிப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்” என முன்வைக்கப்பட்டது.

ஒருவரின் பாலியல் நோக்குநிலையை குற்றமற்றதாக்குவது புத்த சாசனத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் அரசின் கடமையை எவ்வாறு அவமதிப்பதாகும்? அல்லது ஒரு பௌத்த துறவி மற்றொரு நபருடன் பாலியல் உறவு கொள்வது (பாரஜிகா), மற்றைய நபர் அதே பாலினத்தைச் சேர்ந்தவரா அல்லது வேறு

பாலினத்தைச் சேர்ந்தவரா என்பதைக் கவனத்தில் கொள்ளாமல் குற்றமாகக் கருதப்படுவதைத் தவிர, முன்மொழியப்பட்ட திருத்தங்கள் புத்த சாசனத்திற்கு எவ்வாறு முரணானவை என்பதை மனுதாரர்கள் தெளிவுபடுத்தவில்லை.

மனுதாரர்களாலும் அவர்களுக்கு ஆதரவாகவும் முன்வைக்கப்பட்ட பல வாதங்களுக்கு இடையே ஒரு பொதுவான காரணியாக திகழ்வது, இவை பெருமளவில் அனுமானங்களின் அடிப்படையிலானவை என்பதாகும். எனவே அவை சுருக்கமாக நிராகரிக்கப்படலாம். உதாரணமாக, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற வாதமோ அல்லது எச்ஐவி தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற வாதமோ தவறாக வழிநடத்தக்கூடியவை. அறிமுகப்படுத்தப்படவுள்ள திருத்தங்கள் மற்றும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் ஏற்படும் என மனுதாரர்களால் கூறப்பட்ட விடயங்கள், அனுமானங்களுடன் முன்வைக்கப்பட்ட கற்பனையான மற்றும் பார்த்த மாத்திரத்திலேயே தவறான விடயங்கள் என ஒருமித்த குரலில் தெரிவிப்பதற்கு வழிவகுத்ததுடன், மேற்கண்டவாறு வாதிடுவதன் மூலம் சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு சட்டத்தின் சமமான பாதுகாப்பை இல்லாது செய்து கொண்டிருப்பதாக வாதிடப்பட்டது. இந்த விடயத்தை உயர் நீதிமன்றம் இதற்கு முன்னர் பல தீர்ப்புகளில் கருத்திற்கொண்டுள்ளது.

## 06. காவல் அதிகாரிகள் உள்ளிட்ட சேவை வழங்குநர்களிடமிருந்து LGBTIQ+ சமூகம் எதிர்பார்ப்பது என்ன?

LGBTIQ+ சமூகம் அல்லது பால் பல்வித சமூகத்தினர் இலங்கையின் சட்டபூர்வமான குடிமக்களாவார்கள். இவர்கள் வாக்குரிமை கொண்ட, வரி செலுத்துகின்ற, நாட்டின் உழைக்கும் சக்தியில் பங்களிக்கின்ற இலங்கையர்களாவர். எனவே, அனைத்து குடிமக்களுக்கும் உரித்தான சட்டப் பாதுகாப்பினைத் தமக்கும் சமமாகப் பெறுவதற்கான உரிமை, சட்டத்தின் முன் சமநிலை மற்றும் நீதியை அவர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இலங்கை காவல்துறைக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்களின்படி, சர்வதேச உளவியலாளர்கள் சங்கம் மற்றும் உலக சுகாதார நிறுவனம் போன்ற மருத்துவ அமைப்புகளும் நிபுணர்களும் இது ஒரு நோய் நிலைமை அல்ல என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த விளிம்புநிலை குழுக்கள் மனித குலத்தின் தொடக்கத்திலிருந்தே நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு சமூக காரணிகளால் தமது அடையாளத்தை மறைத்துக்கொண்டு இன்றும் பல அர்ப்பணிப்புகளுடன் வாழ்கின்றனர்.

பல்வேறு பால்நிலை அடையாளங்கள் மற்றும் பாலியல் நோக்குநிலைகளைக் கொண்ட சமூகத்தினர், சட்டத்தைப் பாதுகாக்கும் முதன்மை நிறுவனமான காவல்துறைக்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் முறைப்பாடுகளைக் கொண்டு வருகின்றனர். சமூக அவதூறு, பாலியல் துன்புறுத்தல்கள், வேலைவாய்ப்பில் பாகுபாடு காட்டப்படுதல் மற்றும் குடும்பத்திலிருந்து வெளியேற்றப்படுதல் போன்ற சவால்களுக்கு மத்தியில் இவர்கள் வாழ்கின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில், அவர்களின் அடையாளம் அல்லது பாலியல் நோக்குநிலை என்ன என்பதைக் கருதாமல், சட்டத்தை அமுல்படுத்தி நீதியை நிலைநாட்டுவதையும் சேவைகளை வழங்குவதையே இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமது பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டிய முக்கிய குழுக்களாகச் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள், சேவை வழங்கும் அதிகாரிகள் மற்றும் சமூகத்துடன் இணைந்து

பணியாற்றும் அரச அதிகாரிகள் இருக்க வேண்டும் என இச்சமூகத்தினர் தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். திருநர்கள் மற்றும் தன்பாலீர்ப்பாளர்கள் போன்றோரின் அடையாளத்தை மதித்தல், அந்த அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டாதிருத்தல், தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் தனியுரிமைக்கான உரிமையை மதித்தல் ஆகியவற்றைத் தமது கடமைகளைச் செய்யும்போது உறுதிப்படுத்தும் பொறுப்பு காவல் அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளுக்கும் உள்ளது. மேலும், இவர்களுக்கு எதிராகக் குற்றச் செயல்கள் நடந்தால், அவர்களைப் பாதுகாக்கக் காவல்துறை தீவிரமாகத் தலையிட வேண்டும்.

பல்லின அடையாளங்களைக் கொண்ட சமூகத்தின் சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைகள் அல்லது தண்டனைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு முறைப்பாட்டைச் செய்ய வரும்போதோ அல்லது சேவையைப் பெற வரும்போதோ அவர்களைச் சமமற்ற முறையில் நடத்துதல், நிராகரித்தல், தவிர்த்தல், கவனக்குறைவு, தேவையற்ற தாமதம் அல்லது அவர்கள் எதிர்நோக்கும் குற்றங்கள் மற்றும் தவறுகள் குறித்து உணர்திறன் இல்லாமல் இருத்தல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

பணியிடங்களில் உடல்ரீதியான தாக்குதல்கள், வாய்மொழி ரீதியான வசவுகள், ஆபாசமான வார்த்தைகளால் திட்டுதல், அச்சுறுத்திப் பணம் பறித்தல் (Blackmail), பாலியல் துன்புறுத்தல் அல்லது பிற வகையான வன்முறைகளுக்கு அவர்களை உட்படுத்தக் கூடாது. மனரீதியான சித்திரவதை, மனிதாபிமானமற்ற அல்லது அவமரியாதையான முறையில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் என்பன செய்யப்படக்கூடாது.

சட்டத்தின் முன் அங்கீகாரம் பெறுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 12.1 பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள "சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் என்பதோடு,

சட்டத்தின் பாதுகாப்பும் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும;" என்ற அரசியலமைப்பு உத்தரவாதத்தைக் கருத்தில் கொண்டு, காவல் அதிகாரிகள் LGBTIQ+ சமூகம் மற்றும் அவர்களின் அடையாளங்களின் பன்முகத்தன்மையை அங்கீகரிக்க வேண்டும். பல்வேறு துறைகளில் உள்ள அனைத்து காவல் அதிகாரிகளும் மனித பாலியல் பன்முகத்தன்மை குறித்து அறிந்திருக்க வேண்டும் என்பதோடு, யோக்யகர்த்தா கொள்கைகளில் (Yogyakarta Principles) குறிப்பிடப்பட்டுள்ள அவர்களின் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மதிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் குடிமக்களின் தனியுரிமைக்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டியதோடு, தன்பாலீர்ப்பாளர்கள் மற்றும் திருநர்களின் தனிப்பட்ட தகவல்கள் இரகசியத் தகவல்களாகக் கருதப்பட வேண்டும். தனிப்பட்ட அடையாளங்கள் தொடர்பான உணர்திறன் மிக்க தகவல்களை வெளிப்படுத்துவது, அத்திய அவசியத்தின் அடிப்படையில் மட்டுமே வெளியிட வேண்டும். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும்போது, பிற கைதிகள், பொதுமக்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களுக்கு அந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்படக் கூடாது. நலன்புரி சேவைகளை வழங்கும்போது, அடையாளத்தைக் கருதாமல், அந்தச் சேவைகளில் உள்வாங்கப்பட வேண்டும்.

பால் பல்வித அடையாளங்களைக் கொண்ட சமூகத்தினர் குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். குடும்ப வன்முறையின் போதோ அல்லது குடும்ப உறுப்பினர்கள் பாகுபாடு காட்டும் போதோ, காவல்துறை இச்சமூகத்தின் உடல் மற்றும் மன நிலையைப் புரிந்து கொண்டு உதவ முன்வர வேண்டும். இதன் மூலம் அவர்கள் குடும்ப உறுப்பினர்களால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறைக்க முடிவதோடு, இச்சமூகம் எதிர்கொள்ளும் இக்கட்டான சூழ்நிலைகளை அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குப் புரிய

வைக்கக் காவல்துறை தலையிட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தன்பாலீர்ப்பாளராக அல்லது திருநராக இருப்பதன் காரணமாகக் குடும்பம் அல்லது துணைகளிடமிருந்து ஏற்படும் சிக்கலான சூழ்நிலைகளில், சமூக நிறுவன விழுமியங்களுக்கு மட்டும் மட்டுப்படாமல், 18 வயதுக்கு மேற்பட்ட ஒரு முதியவரின் உச்சகட்ட நலனை நாட்டின் நடைமுறைச் சட்டத்திற்கு அமைய சட்டபூர்வமாக உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டத்தை அமுல்படுத்தும் அதிகார அமைப்புகளை அணுகுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். LGBTIQ+ சமூகத்தினர் பயமோ அல்லது எந்தவிதமான துன்புறுத்தலோ இன்றி தன்னம்பிக்கையுடன் முறைப்பாடு செய்யக் காவல்துறை அல்லது பிற அரச நிறுவனங்கள் இடமளிக்க வேண்டும். அவர்கள் முறைப்பாடு செய்யும்போது அவற்றை நிராகரிப்பதோ, வாய்மொழி ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்வதோ அல்லது அச்சுறுத்துவதோ செய்யக்கூடாது. மேலும், அந்தத் தகவல்களைத் தவறாகப் பயன்படுத்தவும் கூடாது.

## 07. LGBTIQ+ சமூகத்திற்கு ஆதரவளிக்கும் மற்றும் பன்முகத்தன்மையை மதிக்கும் நிறுவனங்கள் எவை?

இலங்கை காவல்துறை - வரலாற்றில் முதல் முறையாக இலங்கை காவல்துறை அதிபரினால் 2740/2022 இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டு, தன்பாலீர்ப்பு மற்றும் திருநர் சமூகங்களின் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மீண்டும் அந்த சுற்றரிக்கையை திருத்தி, அனைத்து பன்முக அடையாளங்களைக் கொண்ட சமூகங்களையும் உள்ளடக்கி 2740/2022 (i) என்ற சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் மீண்டும் காவல்துறை அதிபர் அலுவலகத்தினால் 'மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு' அனைத்து காவல்துறை உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வூட்டி ஒரு அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

சுகாதார அமைச்சு - இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பிற்குள் ஒவ்வொரு குடிமகனுக்கும் நியாயமான மற்றும் சமத்துவமான முறையில் சுகாதார சேவைகளை வழங்குவதற்கான கொள்கைகளை வகுத்துள்ளது. குறிப்பாக LGBTIQ+ சமூகத்தினருக்கு சுகாதார சேவைகளை வழங்குவதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்து தற்போது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. மேலும் 2026-2035 தேசிய சுகாதாரக் கொள்கையைத் தயாரிப்பதற்காக LGBTIQ+ சமூகம் தொடர்பான சட்டத் திருத்தங்கள் உள்ளிட்ட முக்கிய கொள்கைகள் தயாரிக்கப்பட்டன.

சமூக சேவைகள் திணைக்களம் - இலங்கையின் சமூகப் பிரச்சினைகளைக் கையாள்வதில் முன்னிலை வகிக்கும் திணைக்களங்களில் ஒன்றான சமூக சேவைகள்

திணைக்களத்தினால், LGBTIQ+ சமூகத்தின் நலன்புரி மற்றும் பன்முக அடையாளங்களைக் கொண்ட சமூகத்தினர் சேவைகளை அணுகுவதற்கான உரிமையைப் பாதுகாப்பதற்குத் தேவையான அரச அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி - தன்பாலீர்ப்பு அல்லது திருநர்களை மனநோயாளிகளாக தவறாக அர்த்தப்படுத்துவதற்கு எதிராக பகிரங்க ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டது.

இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் கல்லூரி - LGBTIQ+ சமூகத்தைப் பாதிக்கும் சட்டங்களைத் திருத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புத் திட்டம் (NSACP) - அந்த நிறுவனத்தின் தேசிய மூலோபாயத் திட்டத்திற்காக, தண்டனைச் சட்டக்கோவையின் 365 மற்றும் 365அ பிரிவுகளை மாற்றுவதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது.

இலங்கை குடும்பத் திட்டமிடல் சங்கம் - LGBTIQ+ சமூகத்திற்குப் பாதகமாக அமையும் சட்டங்களைத் திருத்துவதற்கும், LGBTIQ+ சமூகத்திற்கு நடக்கும் ஓரங்கட்டல்கள் மற்றும் பாரபட்சங்களை ஒழிப்பதற்கும் கொள்கை ரீதியான மட்டத்தில் தேசிய அளவிலான பரிந்துரைப்புப் பணிகளைச் செய்கின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழு - LGBTIQ+ சமூகத்தின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காவல்துறை உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல் தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளது. அத்துடன், நீதி அமைச்சுக்கு இரண்டு முறை 365 மற்றும் 365அ பிரிவுகளை நீக்குமாறு, இரண்டு நீதி அமைச்சர்களுக்கும் பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.

அனைத்து அரச உத்தியோகத்தர்களும் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பைப் பாதுகாக்கக் கடமையாவதோடு, சகல குடிமக்களினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பாகும் என்பதுடன், அனைத்து அரச நிறுவனங்களும் பன்முகத்தன்மையை மதித்துத் தயக்கமின்றி சேவைகளை வழங்க வேண்டும்.

# 08. LGBTIQ+ சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தற்போதுள்ள தீர்ப்புகள், வர்த்தமானிகள், வெளியீடுகள், பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டல்கள் எவை?

## திருநர்களுடன் காவல்துறை உத்தியோகத்தர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்த வழிகாட்டல்கள் (2022/23)

கடந்த ஆண்டுகளில், திருநர்களுக்கு காவல்துறையினரால் ஏற்படும் துன்புறுத்தல்கள் மற்றும் பாரபட்சங்களிலிருந்து பாதுகாப்பதை

நோக்கமாகக் கொண்ட இரண்டு வழிகாட்டல்கள் இலங்கை காவல்துறை அதிபரினால் வெளியிடப்பட்டன.

2022 டிசம்பர் மாதத்தில், காவல்துறை அதிபரினால் (IGP) கடமைகளை நிறைவேற்றும் போது திருநர்களுடன் மனிதாபிமானத்துடனும் சட்ட ரீதியாகவும் நடந்து கொள்வது குறித்த சுற்றறிக்கை ஒன்று காவல்துறை உத்தியோகத்தர்களுக்கு வெளியிடப்பட்டது (IGP circular 2740/2022). 2023 மார்ச் மாதத்தில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அந்த நோக்கத்தை அடைந்துகொள்வதை நோக்கமாகக் கொண்ட வழிகாட்டல் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டது. ஆனால், திருநர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அவர்கள் தொடர்பான கடமைகளை நிறைவேற்றும் போது, குடிமக்களைப் பாதுகாக்கும் காவல்துறையின் பிரதான பொறுப்பின் மீது அதிக முக்கியத்துவம் அளித்து வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன.

(https://www.hrcsl.lk/hrcsl-launches-the-guidelines-for-police-officers-to-protect-transgender-person/).

இந்த வளர்ச்சிகள் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட நபர்கள், நாட்டின் LGBTIQ+ சமூகம் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களால் வரவேற்கப்பட்டதுடன், இந்த வழிகாட்டல்கள் குறித்த தேசிய மட்டத்திலான கலந்துரையாடல் சாதகமான ஒன்றாக அமைந்தது. எவ்வாறாயினும், இந்த வழிகாட்டல் தொகுப்பு மற்றும் சுற்றறிக்கை எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்று சமூக மாற்றச் செயற்பாட்டாளர்களும் திருநர்களும் சந்தேகம் எழுப்புகின்றனர், ஏனெனில் இன்றும் அரச அதிகாரிக;டாக இடம்பெறும் வன்முறைகள் சில வடிவங்களில் பதிவாகும் நிலை காணப்படுகிறது. அதேவேளை, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் காவல்துறை உத்தியோகத்தர்கள் எவ்வளவு தூரம் கற்றறிந்தவர்கள் மற்றும் தன்பாலீர்ப்பு மற்றும் திருநர்களிடம் நட்பாக இருக்கிறார்கள், மற்றும் அவர்கள் இந்தக் கொள்கை

முடிவுகளை எவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்கிறார்கள் என்பது குறித்துச் சந்தேகம் நிலவுகிறது.

இந்தச் சூழலில், மேற்கூறிய வழிகாட்டல்கள் பலன் தருவதை உறுதி செய்வதற்காக, குறிப்பாகச் சாதாரண குடிமக்களுடன் தொடர்புகொள்ளும் காவல்துறை உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் மற்றும் தெளிவுபடுத்தும் தேவையிருப்பதை சமூகச் செயற்பாட்டாளர்களும் LGBTIQ+ நபர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதற்கமைய 2024 ஆம் ஆண்டில் இக்விட்டி அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன், "கண்ணியம், பன்முகத்தன்மை மற்றும் காவல்துறை" (Dignity> Diversity and Policing) எனும் பெயரில் பாடநெறி ஒன்று இலங்கை காவல்துறை பயிற்சி நிறுவனத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2021 ஆகஸ்ட் மாதத்தில், கண்டி காவல்துறை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றில், தன்பாலீர்ப்பை நிராகரிக்குமாறு காவல்துறை உத்தியோகத்தர்களை ஊக்குவித்த போதகர் மற்றும் பயிற்சியாளரான அமா திஸாநாயக்கவின் காணொளி சமூக ஊடகங்களில் தீவிரமாக பரவியது. அதில், தனது பிள்ளைகள் ‘‘தன்பாலீர்ப்பு நபர்களின் பலியாக’’ (Victim) மாறுவதை நீங்கள் விரும்புகிறீர்களா என காவல்துறை உத்தியோகத்தர்களிடம் வினவே, அதற்கு ‘‘இல்லை’’ என காவல்துறை உத்தியோகத்தர்கள் பதிலளித்தனர். மேலும் தன்பாலீர்ப்பு உறவு இனப்பெருக்கச் செயற்பாட்டிற்குப் பங்களிக்காது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது நாட்டின் LGBTIQ+ சமூகத்திற்கு, குறிப்பாகத் தன்பாலீர்ப்பு ஆண்கள் மற்றும் தன்பாலீர்ப்புப் பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவது குறித்த புதிய கலந்துரையாடல் உருவாகக் காரணமாக அமைந்தது. அவரது முழுமையான உரையில் தன்பாலீர்ப்பு நபர் ஒருவருக்கு தன்பாலீர்ப்பு உறவில் ஈடுபட

இருக்கும் உரிமையை அங்கீகரிக்காததால் LGBTIQ+ செயற்பாட்டாளர்கள், அமா திஸாநாயக்கவிற்கு எதிராகக் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முயற்சித்தனர். சமூக மாற்றச் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றினால், 'LGBTIQ+ சமூகத்திற்குப் பாரபட்சம் காட்டும் கருத்துக்களை மேம்படுத்தக்கூடிய அமர்வுகள் அடங்கிய கருத்தரங்குகளை நடத்துவதைத் தடுப்பதற்காக காவல்துறைக்குத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு' மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பேராணை (Writ) மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. 2021 நவம்பர் 12 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் மனுதாரர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் அதாவது காவல்துறை அதிபர் சந்தன டி விக்ரமரத்ன, கண்டி பிரதிப் காவல்துறை அதிபர் (DIG) சந்தன அலக்கோன் மற்றும் திஸாநாயக்க ஆகியோருக்கு அறிவித்தல் வழங்க அனுமதி அளித்தது.

## <u>தன்பாலீர்ப்பு குறித்து இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரியின் நிலைப்பாடு (2021)</u>

அமா திஸாநாயக்கவின் கூற்றுகளுக்கு எதிராக பல சமூக மாற்றச் செயற்பாட்டாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, **இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி** 2021 ஆகஸ்ட் மாதத்தில், தன்பாலீர்ப்பு குறித்த இந்த தவறான கருத்து தொடர்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டது. தன்பாலீர்ப்பு என்பது மனதிலோ அல்லது உடலிலோ ஏற்படும் ஒரு நோயினால் உண்டாகும் நிலை என்ற கருத்தை மனநல மருத்துவர்கள் கல்லூரி அங்கீகரிக்கவில்லை என்பதை வலியுறுத்தி அந்த அறிக்கை இவ்வாறு கூறுகிறது: ‘‘நவீன மனநல மருத்துவர்கள் தன்பாலீர்ப்பை ஒரு மனநோயாகக் கருதுவதில்லை. தன்பாலீர்ப்பு ஒரு மனநோய் என்ற இந்த கட்டுக்கதை, இன்று நாம் பின்பற்றும் நவீன மனநல அறிவியலின் அறிவியல் சான்றுகளுடன் ஒத்துப்போகவில்லை. நவீன மருத்துவ அறிவு மற்றும் சமூக விழுமியங்களின்படி,

LGBTIQ+ சமூகத்தினரின் வாழ்க்கை முறைத் தேர்வுகளை மதிக்க வேண்டும் மற்றும் பாகுபாடு காட்டக்கூடாது. தன்பாலீர்ப்பு ஒரு குற்றவியல் செயல் எனக் குறிப்பிடும் தண்டனைச் சட்டக்கோவையின் 365 ஆம் பிரிவை மாற்றுமாறு அதிகாரிகளை வன்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். இந்த பழங்கால சட்டத்தை நீக்கி இலங்கையில் தன்பாலீர்ப்பை குற்றமற்றதாக்க வேண்டும்.'' என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

## திருநங்கைகளுக்கான பால்நிலை அங்கீகாரச் சான்றிதழை (GRC) அறிமுகப்படுத்துதல் (2016)

சுகாதார அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புசுஊ என்பது, பால்நிலை மாற்றச் செயல்முறையைப் பின்பற்றும் ஒரு திருநருக்கு ஆலோசக மனநல மருத்துவரால் வழங்கப்படக்கூடிய ஆவணமாகும். திருநர்கள் தமது பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு மற்றும் ஓட்டுநர் உரிமம் போன்ற சட்டப்பூர்வ ஆவணங்களை அவர்களின்பால்நிலை அடையாளத்திற்கு ஏற்ப மாற்றுவதற்கு முயற்சிக்கும்போது இது அவசியமாகிறது. சட்டப்படி, இது 16 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதுடன், ஒரு திருநங்கையோ/திருநம்பியோ தான் உணரும் பால்நிலை அடையாளத்தை (Identity) அவர்களின் பிறப்புச் சான்றிதழில் காட்ட வேண்டும்.

இது தொடர்பாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ள போதிலும், திருநர்களின் சட்ட ஆவணங்களை மாற்றுவது தொடர்பாகச் செயற்படும் அரச அதிகாரிகளிடமிருந்து போதிய ஒத்துழைப்பும் சேவைகளும் கிடைப்பதில்லை என சில திருநர்கள் முறையிடுகின்றனர். எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான திருநர்கள் பால்நிலை அங்கீகாரச்

சான்றிதழை (Gender Recognition Certificate - GRC) பெற்ற பிறகு, அவர்களின் சட்ட ஆவணங்களை, குறிப்பாகப் பிறப்புச் சான்றிதழ், கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை வெற்றிகரமாக மாற்றியுள்ளனர்.

இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவை பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை (சிலோன்) அப்போது 1815 முதல் 1948 வரை பிரித்தானிய காலனித்துவ நாடாக இருந்தது. இக்காலப்பகுதியில், பிரித்தானிய நிர்வாகம் காலனி முழுவதும் சட்டத் தரங்களை நிலைப்படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் முயற்சித்ததோடு, இன்றும் சில திருத்தங்களுடன் நாம் பயன்படுத்துவது காலனித்துவ காலத்தில் நமக்குக் கிடைத்த தண்டனைச் சட்டக்கோவையையே ஆகும்.

இந்த தண்டனைச் சட்டக்கோவையில் தன்பாலீர்ப்பு "பாலியல் உறவுகள்" குறித்த சட்ட நிலைமை ஓரளவு கேள்விக்குரியதாக உள்ளது. ஏனெனில் தண்டனைச் சட்டக்கோவையின் 365 மற்றும் 365அ பிரிவுகள் தன்பாலீர்ப்பு பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இடமளிக்கின்றன.

இருப்பினும், இந்த பிரிவுகளில் தன்பாலீர்ப்பு அல்லது திருநர்களின் பாலியல் செயல்பாடுகள் குறித்து நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. இந்தப் பிரிவுகளைப் பயன்படுத்தி தன்பாலீர்ப்பு நபர்களை தன்னிச்சையாகக் கைது செய்வதற்கும், அவர்களை அவமானப்படுத்துவதற்கும் இடமளிக்கப்படுகிறது.

**365ஆம் பிரிவு**

‘‘யாதேனும் ஒரு ஆண், பெண் அல்லது விலங்குடன் இயற்கையின் ஒழுங்குக்கு மாறாகத் தன்னிச்சையாகப் பாலியல் உறவில் ஈடுபடும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்பட வேண்டும். பதினாறு வயதுக்குட்பட்ட எவரேனும் ஒரு நபர் தொடர்பாக

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவரால் குற்றம் இழைக்கப்படும்போது, பத்து ஆண்டுகளுக்கு குறையாத மற்றும் இருபது ஆண்டுகளுக்கு மிகாத காலத்திற்கு கடுமையான சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, குற்றம் செய்த நபர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகையை இழப்பீடாக வழங்கவும் உத்தரவிடப்படும்." என்கிறது.

**365அ பிரிவு**

"பகிரங்கமாகவோ அல்லது இரகசியமாகவோ பிறிதொரு நபருடன் ஏதேனும் ஒரு கடுமையான அநாகரீகச் செயலைச் செய்யும் அல்லது அத்தகைய செயலில் பங்காளியாகும் அல்லது அத்தகைய செயலை ஒரு நபர் செய்வதற்குக் தூண்டும் அல்லது தூண்ட முயற்சிக்கும் எவராயினும் குற்றவாளியாவார். அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கு இரு வகையான சிறைத்தண்டனைகளில் ஒன்றோ அல்லது அபராதமோ அல்லது இவ்விரண்டு தண்டனைகளுமோ விதிக்கப்பட வேண்டும். மேலும் அக்குற்றம் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவரால் 16 வயதுக்குட்பட்ட ஒருவருக்கு எதிராக இழைக்கப்படும் சந்தர்ப்பத்தில், பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மிகாததுமான காலத்திற்கு கடுமையான வேலைகளுடன் கூடிய சிறைத்தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்பட வேண்டும். மேலும் அக்குற்றம் யாருக்கு எதிராக இழைக்கப்பட்டதோ அந்த நபருக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் ஒரு தொகையை இழப்பீடாக வழங்குமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம்." என்கிறது.

**399ஆம் பிரிவு:**

‘‘யாதேனும் ஒரு நபர் மற்றொரு நபராக ஆள்மாறாட்டம் செய்வதன் மூலம் அல்லது ஒருவருக்குப் பதிலாக மற்றொருவரைத் தெரிந்தே முன்னிறுத்துவதன் மூலம், அல்லது அந்த நபர் அல்லது மற்றொரு நபர் உண்மையில் அந்த நபராகவோ அல்லது மற்றொரு நபராகவோ இல்லாமல் வேறொருவராக இருக்கும்போது அவ்வாறு சித்தரிப்பதன் மூலம் ஏமாற்றினால், அவர் “ஆள்மாறாட்டம் மூலம் மோசடி செய்தவராக“ கருதப்படுவார்.’’

தண்டனைச் சட்டக்கோவையின் 399 ஆம் பிரிவு 'மற்றொரு நபராக ஆள்மாறாட்டம் செய்து மோசடி செய்வதைத்' தடைசெய்கிறது. இதன் அடிப்படை அர்த்தம் வேறொருவராகத் தோன்றுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதாகும். LGBTIQ+ உரிமை அமைப்புகள், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சமூகமாற்ற செயற்பாட்டாளர்களுக்குக் கிடைக்கும் புகார்களின்படி, இந்தச் சட்டம் திருநர்களை இலக்கு வைத்து, அவர்கள் வேறொரு நபராக ஆள்மாறாட்டம் செய்வதாகக் குற்றம் சுமத்தப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் பல சந்தர்ப்பங்களில் காவல்துறையினரால் திருநர்களுக்குத் துன்புறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. திருநர்களின் கருத்துப்படி, இந்தத் துன்புறுத்தல்கள் வெறும் வாய்மொழி வசவுகள் முதல் கடுமையான பாலியல் மற்றும் பண லஞ்சம் கோருதல் வரை நீடிக்கின்றன.

1883 ஆம் ஆண்டு இலங்கையில் இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டபோது, பிரித்தானியர்கள் தமது காலனித்துவ நாடுகளில் விக்டோரியன் விழுமியங்களைப் புகுத்த முயற்சித்துக் கொண்டிருந்தனர். 1860 இல் இந்தியச் சட்ட ஆணைக்குழுவின் தலைவர் பிரபு மெக்காலே, இந்தியத் தண்டனைச் சட்டக்கோவையில் 377 ஆம் பிரிவைச் சேர்க்க வேண்டும் எனப் பரிந்துரைத்தார். பின்னர் இலங்கை போன்ற ஏனைய காலனித்துவ நாடுகளிலும் இதைப் போன்ற சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. மெக்காலேயின் ஆரம்ப வரைவு, ”இயற்கைக்கு மாறான இச்சையுடன் எவரேனும் ஒரு நபரைத் தொடும் எவரும் தண்டிக்கப்பட வேண்டும்” என விதித்தது. இவ்வாறான

ஒழுக்கக்கேடான செயல்கள் குறித்து விவாதிப்பதை மெக்காலே எதிர்த்ததால், இந்தச் சட்டம் பெரிய விவாதங்கள் இன்றி நிறைவேற்றப்பட்டது. இதனால் இச்சட்டத்தின் மொழி தெளிவற்றதாக உள்ளது.

**சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட பொதுச் சுற்றறிக்கை இலக்கம் 01-34 ∴ 2016: திருநர் சமூகத்தினருக்கான பால்நிலை அங்கீகாரச் சான்றிதழை வழங்குதல்.** - இந்தச் சுற்றுநிரூபத்தின் மூலம் இலங்கைப் பிரஜைகளான அனைத்து திருநர்களும் அரசாங்க மருத்துவமனைகளில் உள்ள விசேட மனநல மருத்துவர் ஊடாக இச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். இச்சான்றிதழைப் பெற்ற பிறகு பிறப்புச் சான்றிதழில் பெயர் மற்றும் புதிய பால்நிலை, தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் திருநர்களைப் பாதுகாப்பதற்காக காவல்துறை அதிகாரிகளுக்கான வழிகாட்டலை வெளியிடுதல்.

LGBTIQ+ சமூகத்தின் உரிமைகள் மீறப்படுவது மற்றும் காவல்துறை சித்திரவதைகள் தொடர்பாகக் கிடைத்த புகார்களின் அடிப்படையில் இந்த வழிகாட்டல் இலங்கை காவல்துறைக்கு வழங்கப்பட்டது. இந்த வழிகாட்டலின் 12 வது அறிவுறுத்தலின் படி, இலங்கையில் உள்ள அனைத்து LGBTIQ+, சமூகத்தினரின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான உரிமையை உறுதிப்படுத்துமாறும், அதற்கான அமைதியான சூழலை உறுதிப்படுத்துமாறும் இலங்கை காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழு 2023.11.23 அன்று அப்போதைய நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிற்கும், 2025.05.22 அன்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாநாக்காரவிற்கும் ஒரு பரிந்துரை மூலம் தண்டனைச்

சட்டக்கோவையின் 365 மற்றும் 365அ பிரிவுகளைத் திருத்தவும் நீக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தது. (செய்தி அறிவித்தல் இல - HRC/P/i/E/ 23/11/23)

**இலங்கை காவல்துறை தனது காவல்துறை அதிபரின் சுற்றறிக்கை 2740/2022** மற்றும் குற்றவியல் சுற்றறிக்கை 03/2022 ஊடாக "திருநர்கள் மற்றும் பாலின மாற்றத்திற்கு உள்ளான நபர்கள் தொடர்பாகச் செயற்படும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்" எனும் வழிகாட்டல்களை வழங்கியது. இந்தச் சுற்றுநிரூபத்தின் தலைப்பு தொடர்பாகப் பிரச்சினைகள் எழுந்ததால், கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் காவல்துறை அதிபர் சுற்றறிக்கை 2740/2022 (i) வெளியிடப்பட்டது. அந்தத் திருத்தத்தில் "திருநங்கைகள் மற்றும் பாலின மாற்றத்திற்கு உள்ளான நபர்கள்" என்ற சொல்லிற்குப் பதிலாக "LGBTIQ+ சமூகம்" என்ற சொல்லைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**இலங்கை காவல்துறை அதிபர் அலுவலகம் 2025.03.14 அன்று மீண்டும் 2740/2022 இலக்க சுற்றறிக்கை** மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைய ஒரு அறிவுறுத்தல் தொகுப்பை வெளியிட்டதுடன், அனைத்து அதிகாரிகளும் கடமையின் போது இவ்வறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

**இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி 2021.09.18** - "தன்பாலீர்ப்பு என்பது மனதிலோ அல்லது உடலிலோ ஏற்படும் ஒரு நோயினால் உண்டாகிறது என்ற கருத்தை இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி அங்கீகரிக்கவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறோம். நவீன யுகத்தில் மனநல மருத்துவர்கள் தன்பாலீர்ப்பை ஒரு மனநோயாகக் கருதி நோயறிதல் செய்வதில்லை, அவ்வாறு கருதி சிகிச்சையளிப்பதும் இல்லை. தன்பாலீர்ப்பை மனநோயாகக் கருதும் இந்தத் தவறான

கருத்து, எமது அங்கத்துவ மருத்துவர்கள் பின்பற்றும் அறிவியல் சான்றுகளுடன் ஒத்துப்போகவில்லை."என்றும்,

"தன்பாலீர்ப்பைக் குற்றவியல் குற்றமாகக் காட்டும் தண்டனைச் சட்டக்கோவையின் 365 ஆம் பிரிவை மாற்றுமாறு அதிகார அமைப்புகளை வற்புறுத்துகிறோம். இந்தப் பழமையான சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் என்பதுடன் தன்பாலீர்ப்பைக் குற்றமாகக் கருதுவது நிறுத்தப்பட வேண்டும்" என இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி பகிரங்க அறிவிப்பை வெளியிட்டது.

**இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் கல்லூரி** 2023.05.08 அன்று விடுத்த பகிரங்க அறிவிப்பில், தன்பாலீர்ப்பு சமூகத்தினரைக் குற்றவாளிகளாகக் கருதும் சட்டங்களை மாற்றுவது (குற்றமற்றதாக்குவது) குறித்து சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புத் திட்டத்தின் 2018-2022 மூலோபாயத் திட்டத்திலும், தற்போது முடிவடைந்துள்ள 2023-2027 திட்டத்திலும், LGBTIQ+ சமூகத்தைப் பாதிக்கும் சட்டங்களை மாற்றுவதற்கான செயல்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் குற்றமற்றதாக்குவதன் மூலம் சுகாதாரச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தவும், பரிசோதனை மற்றும் சிகிச்சைகளில் இச்சமூகத்தினரை ஈடுபடுத்தவும், சமமான சுகாதாரச் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கை சுகாதாரச் சேவையில் சமத்துவம் மற்றும் நீதிக் கோட்பாடுகளை ஆதரிக்க முடியும் என இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் கல்லூரி அறிவித்துள்ளது.

## விமலசிறி எதிரிவ நிலையப் பொறுப்பதிகாரி (OIC), மருதானை காவல்துறை நிலையம் மற்றும் சட்டமா அதிபர் (AG) (2016) வழக்கின் உயர் நீதிமன்றத் தீர்ப்பு

2016 ஆம் ஆண்டில், உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது (விமலசிறி எதிரிவ OIC, மருதானை காவல்துறை நிலையம் மற்றும் சட்டமா அதிபர் வழக்கு). இதில் தண்டனைச் சட்டக்கோவையின் 365A பிரிவின் இருப்பு மற்றும் அமுலாக்கம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

தண்டனைச் சட்டக்கோவையின் 365A பிரிவின் கீழ் 'கடுமையான அநாகரீகச் செயலில்' ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கும் எதிராக முதலில் நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதவான் அவர்கள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு தண்டனை விதித்தார். அவர்கள் மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்த போதிலும், மேல் நீதிமன்றம் முந்தைய குற்றச்சாட்டையும் தண்டனையையும் உறுதி செய்தது. அதன்பின்னர் அவர்கள் உயர் நீதிமன்றத்தின் உதவியை நாடினர். இந்த வழக்கு உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஈவா வனசுந்தர (PC), புவனேக அலுவிஹாரே (PC) மற்றும் அனில் குணரத்ன (PC) ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் தீர்ப்பு உயர் நீதிமன்றத்தில் இவ்வாறு வழங்கப்பட்டது: “வழக்குடன் தொடர்புடைய நபர்கள் பெரியவர்கள் என்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை, மேலும் இந்தச் செயல் பரஸ்பர சம்மதத்துடன் நடந்தது என்பதில் சந்தேகமில்லை. 365A பிரிவு 19 ஆம் நூற்றாண்டில் தண்டனைச் சட்டக்கோவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே எமது குற்றவியல் சட்டத்துறையின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. 1995 இல் ஒரு சிறிய திருத்தம் செய்யப்பட்ட போதிலும், அதன் தன்மை மாற்றப்படவில்லை மற்றும் அக்குற்றம் இன்னும் நடைமுறையில் உள்ளது. இந்தத் தவறு

இங்கிலாந்து சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த, பொது ஒழுக்கத்தின் அடிப்படையிலான பாலியல் நடத்தைகள் மற்றும் தவறுகள் தொடர்பானது. பாலியல் குற்றச் சட்டத்தின் மூலம் 2004 இல் இங்கிலாந்தில் இத்தகைய பாலியல் குற்றங்கள் நீக்கப்பட்டன, இப்போது அது இங்கிலாந்தில் ஒரு குற்றமல்ல."

மேலும், பெரியவர்களுக்கு இடையில் சம்மதத்துடன் ஏற்படும் பாலியல் உறவு அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படக்கூடாது என்ற சமகாலச் சிந்தனையை உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. அத்துடன் சம்மதத்துடன் கூடிய பாலியல் உறவை குற்றமாகக் கருதக்கூடாது என்ற சமகாலச் சிந்தனை பல ஆண்டுகளாக வளர்ச்சியடைந்துள்ளதையும், அதுவே இங்கிலாந்தில் இச்சட்டம் நீக்கப்படுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்பதையும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

இருப்பினும், அந்தத் தவறு இலங்கையின் சட்டத்தின் ஒரு பகுதியாக இன்னும் நீடிக்கிறது எனக் குறிப்பிட்ட நீதியரசர் அலுவிஹாரே மேலும் கூறியதாவது: ‘‘மேன்முறையீடு செய்தவருக்கு முந்தைய குற்றப் பின்னணிகள் எதுவும் இருப்பதற்கான சான்றுகள் இல்லை. எனவே அந்தச் செயல் சம்மதத்துடன் நடந்தது என்பதையும், மற்றைய பிரதிவாதிக்கும் குற்றப் பின்னணி இல்லை என்பதையும் கருத்திற் கொள்ளும்போது, சிறைத் தண்டனையுடன் இக்குற்றத்தைப் பார்ப்பது பொருத்தமற்றதாகத் தெரிகிறது. எனது கருத்தின்படி, குற்றவாளிகள் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ள ஒரு வாய்ப்பளிப்பதற்கு இது பொருத்தமான சந்தர்ப்பமாகும். மேற்கூறிய காரணங்களைக் கருத்திற் கொள்ளும்போது, இவ்வழக்கில் சிறைத் தண்டனை விதிப்பது பொருத்தமற்றது என்பது எனது கருத்து.’’ என்றார்.

இந்தச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்ட உயர் நீதிமன்றம், ஓராண்டு சிறைத் தண்டனையை ரத்து செய்து, அதற்குப் பதிலாக இரண்டு ஆண்டுகால கடுமையான சிறைத் தண்டனையை விதித்ததுடன், குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 303(1)

பிரிவின் கீழ் செயற்பட்டது. நீதவான் தண்டனையை அறிவித்த நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், ஐந்து ஆண்டுகாலத்திற்கு அந்தச் சிறைத் தண்டனை இடைநிறுத்தப்பட்டது (Suspended Sentence).

2020 ஜூன் மாதத்தில் நாரஹேன்பிட்டிய (கொழும்பு) காவல்துறையினரால் ஒரு தனியார் விடுதியை முற்றுகையிட்டு கைது செய்யப்பட்ட மூன்று தன்பாலீர்ப்பு ஆண்களுக்கு எதிரான வழக்கை 2021 டிசம்பர் மாதத்தில் கொழும்பு மேலதிக நீதவான் தள்ளுபடி செய்தார். கைது செய்யப்பட்ட நேரத்தில் அவர்கள் பாலியல் ரீதியான செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் காவல்துறை சித்திரவதைகளுக்கும், சட்ட மருத்துவ அதிகாரிகளால் (JMOs) கட்டாய மலக்குடல் பரிசோதனைகளுக்கும் (Anal Exams) உட்படுத்தப்பட்டனர். சட்டமா அதிபர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்போவதில்லை என காவல்துறைக்கு அறிவித்த கடிதத்தின் அடிப்படையில் 34131/3/20 இலக்க வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

## 09. அரச சேவையின் பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகள்.

காவல்துறை, அரச நிறுவனங்கள் மற்றும் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள், மாநாடுகள் மற்றும் முன்முயற்சிகள்

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற உலகளாவிய காலமுறை மறுஆய்வு (UPR) கூட்டத்தில், இலங்கை அரசியலமைப்பில் பிரதிபலிக்கின்ற சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான பொதுவான உரிமையில், பாலியல் நோக்குநிலை அடிப்படையிலான பாகுபாடின்மை மறைமுகமாக உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டதுடன், அந்த உரிமைகளை வழங்க உத்தேசித்துள்ளதாகவும் இலங்கை தெரிவித்தது. சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை தொடர்பான பொதுவான உரிமைகள் தற்போதைய அரசியலமைப்பால் உள்ளடக்கப்படுவதாகவும், பாலியல் நோக்குநிலை அடிப்படையிலான பாகுபாடுகளைத் தடுப்பதை உறுதி செய்ய வருங்கால அரசியலமைப்பு திருத்தங்கள் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது (A/HRC/37/17, பந்தி 82).

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 4 வது உலகளாவிய காலமுறை மறுஆய்வுச் சுழற்சி 2023 பெப்ரவரி 1 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற்றது. அப்போதைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையின் மனித உரிமைகள் ஆய்வு அறிக்கையைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து பரிந்துரைகளை வழங்கின.

அப்பரிந்துரைகளில், பல நாடுகள் பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறை தொடர்பாக, குறிப்பாக இலங்கையில் வாழும் LGBTIQ+ நபர்கள் குறித்து கவனம் செலுத்தியிருந்தன.

யுகே (ஐக்கிய இராச்சியம்), யுஎஸ்ஏ (அமெரிக்கா), உருகுவே, அல்ஜீரியா, அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, அஜர்பைஜான், பிரேசில், புருண்டி, கனடா, சிலி, கோஸ்டாரிகா, கியூபா, செக்கியா, பிரான்ஸ், ஜார்ஜியா, ஐஸ்லாந்து, இஸ்ரேல், குவைத், லாட்வியா, மால்டா, மெக்சிகோ, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, ஹங்கேரி போன்ற நாடுகள் தன்பாலீர்ப்பு நடத்தையைக் குற்றமாகக் கருதும் தண்டனைச் சட்டக்கோவையின் 365 மற்றும் 365A பிரிவுகளை நீக்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டன.

சித்திரவதைக்கு எதிரான மாநாட்டிற்கு இணங்கவும், சுகாதார சேவைகள், மருந்துகள், ஏனைய சமூக சேவைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான நிறுவனங்களை அணுகும்போது அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், LGBTIQ+ நபர்களுக்கான மாற்றுச் சிகிச்சைகளை (Conversion Therapy) தடை செய்யுமாறும் அந்த நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்கின.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பிரதான அடிப்படை மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் (UDHR), சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ICESCR) ஆகியவையாகும். இவற்றின் தொகுப்பு 'சர்வதேச உரிமைகள் சட்டமூலத்தை' (International Bill of Rights) உருவாக்குகின்றது. இந்தச் சட்டங்கள் உலகளாவிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் 80 க்கும் மேற்பட்ட சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் பிரகடனங்களுக்கு உந்துதலாக அமைந்துள்ளதுடன், மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பாகும்.

## 10. சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள்

- அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் (1948).
- சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச உடன்படிக்கை (1976).
- பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான உடன்படிக்கை (1979).
- பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR).
- சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகை அல்லது தண்டனைகளுக்கு எதிரான உடன்படிக்கை (CAT).
- பாலியல் நோக்குநிலை மற்றும் பால்நிலை அடையாளத்தின் அடிப்படையிலான வன்முறை மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான பாதுகாப்பு குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், 2016.06.30.
- மனித உரிமைகள், பாலியல் நோக்குநிலை மற்றும் பால்நிலை அடையாளம் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், 2014 செப்டம்பர் 26.
- 1995 பீஜிங் பிரகடனம் மற்றும் அதற்கான செயற்திட்டம்.

ஆசிய ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள்

- பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (SAARC) சமூக சாசனம் (2004).

*“இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் என்பது சமத்துவம், கருத்துச் சுதந்திரம், மதச் சுதந்திரம், தனிநபர் சுதந்திரம், சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பு போன்ற மனித கண்ணியத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் அத்தியாவசிய உரிமைகளாகும். அதிகார துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், அனைத்துப் பிரஜைகளுக்கும் பாகுபாடின்றி நீதியையும் பாதுகாப்பையும் வழங்குவதற்கும் இவைகளைப் பாதுகாப்பது அவசியமாகும். அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பிரதான பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதுடன், நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய அனைத்து அரச நிறுவனங்களும் அவற்றிற்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். குறிப்பாக, அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைப் பாதுகாப்பதற்கும் நியாயமான தீர்வுகளை வழங்குவதற்கும் நீதித்துறை பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. அதேபோன்று அரச உத்தியோகத்தர்கள், பொலிஸார், முப்படைகள் மற்றும் ஏனைய அதிகாரிகள் அனைவரும் அடிப்படை உரிமைகளை மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பானவர்கள் என்பதுடன், பிரஜைகளும் தமது உரிமைகள் குறித்து விழிப்புணர்வுடன் இருந்து அவற்றைப் பாதுகாப்பதில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.”*

சமீபத்திய ஆண்டுகளில், பல்வேறு அடையாளங்களைக் கொண்ட சமூகங்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் இலங்கைக்குள் அங்கீகரிக்கப்பட்டு கலந்துரையாடலுக்கு உள்ளாகி வருகின்றன. இருப்பினும், இந்த வளர்ந்து வரும் உரையாடலில், LGBTIQ+ நபர்களின் தேவைகள் மற்றும் அனுபவங்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன, ஒதுக்கப்படுகின்றன அல்லது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன. LGBTIQ+ சமூகத்தைச் சேர்ந்த பலர் எதிர்கொள்ளும் சவால்கள் வெறும் உரிமை சார்ந்த பிரச்சினைகள் மட்டுமல்ல, அவை வன்மையான இழிவுபடுத்தல், பாகுபாடு, குற்றமயமாக்கல் மற்றும் சமூகப் புறக்கணிப்பு ஆகியவற்றுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கு அனுதாபம் மட்டுமல்லாது, நீதி, சமத்துவம் மற்றும் கண்ணியத்திற்காக அனைத்துப் பிரஜைகளினதும் துணிச்சலான அர்ப்பணிப்பு அவசியமாகும்.

இலங்கையில் பல்வேறு அடையாளங்களைக் கொண்ட சமூகத்தின் உரிமைகள் குறித்த இந்த ஆக்கம், அரச சேவைக்கும் மனித உரிமைகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கான ஒரு முக்கியமான படியாகும். இலங்கையின் அரசியலமைப்பு, சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள், உத்தியோகபூர்வ அறிவிப்புகள் மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளின் ஊடாகத் தொகுக்கப்பட்டுள்ள இந்த ஆக்கம், இலங்கை பிரஜைகளின் பாலின மற்றும் பால்நிலை பன்முகத்தன்மை மற்றும் அவர்களின் நெகிழ்ச்சித் தன்மையை விவரிப்பதுடன், உரிமைகளை உறுதிப்படுத்துதல், கண்ணியமான மற்றும் உரிமை அடிப்படையிலான சேவைக்கான அணுகுமுறையை முன்வைக்கிறது.

இலங்கை, மனித மேம்பாட்டின் ஒரு திருப்புமுனையில் உள்ளது. ஒதுக்கப்பட்ட சமூகங்களின் குரல்களில் அதிகரித்துவரும் வெளிப்பாடுத்தன்மை, உரிமைகள் மற்றும் சட்டம் குறித்த வளர்ந்து வரும் விழிப்புணர்வுடன் இணைந்து, சேவைகளையும்

பராமரிப்பையும் வழங்குவதை ஒரு தர்மமாகவோ அல்லது சீர்திருத்தமாகவோ அல்லாமல், வலுவூட்டல் மற்றும் விடுதலையாக மறுசீரமைப்பதற்கான ஒரு வலுவான வாய்ப்பை உருவாக்குகிறது.

இந்த வழிகாட்டி வெறும் விழிப்புணர்வை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. இது எமது நாட்டில் நிலவும் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் மனப்பாங்குகளை மாற்றியமைக்க முயற்சிக்கிறது. ஒதுக்கப்பட்ட சமூகங்களின் வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சூழ்நிலைகளைப் பாதுகாப்பதில் அல்லது அச்சமூகங்களுக்குச் சவால்களை விடுப்பதில் தமது வகிபாகங்களை மறுபரிசீலனை செய்ய அரச அதிகாரிகள், தொழில் வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூகப் பங்காளிகளுக்கு இந்த வழிகாட்டி ஒரு துணையாக அமையும்.

இந்த ஆக்கம் மற்றவர்களுக்கு அனுதாபத்துடன் செவிசாய்ப்பதற்கும், நேர்மையுடன் செயற்படுவதற்கும் மற்றும் ஒவ்வொரு நபரின் பாலியல் நோக்குநிலை, பால்நிலை அடையாளம் அல்லது வெளிப்பாட்டைப் பொருட்படுத்தாமல் அவர்களின் இயல்பான மதிப்பை உறுதிப்படுத்துவதற்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் விடுக்கப்படும் ஒரு நினைவூட்டலாகும். உண்மையான சுதந்திரமான அரச சேவை அனைத்துப் பிரஜைகளுக்கும் சமமாக அமையாமல் இருக்க முடியாது என்பதுடன், நீதியில்லாத சுதந்திரம் முழுமையற்றதாகும்.

இந்த வழிகாட்டி மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும், ஆதரவிற்கான ஒரு வளமாகவும், அரச சேவையிலிருந்து எவரும் விடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான எமது கூட்டுப் பொறுப்பிற்கு ஒரு சான்றாகவும் அமையும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்த நூலில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் குறித்த மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்.

# கண்ணியம், சமத்துவம் மற்றும் நிர்வாகம்

இலங்கையின் LGBTIQ+ சமூகத்தினரின்
உரிமைகளைப் புரிந்துகொள்வதற்கும்,
ஆதரவளிப்பதற்குமான ஒரு வழிகாட்டி.

*Dignity, Diversity, and Governance*


**தொகுப்பு**
H.K.M. துஷார மனோஜ்
N.B. ஆதில் சுராஜ் விமுக்தி

**தமிழ் மொழிப்பெயர்ப்பு:**
R. சதுர்சன்

**சரிபார்த்தவர்:**
அனுஷன் சத்தியசீலன்



Équité நிறுவனத்தின் வெளியீடு

Équité HUMANITY for ALL